வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 14.05.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 163 | பக்கங்கள் : 16





# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவுச்சின்னம் அடித்துடைப்பு!

## காணாமல் ஆக்கப்பட்டது புதிய நினைவுக் கல்

முல்லைத்தீவு, மே 14

வன்னியில் இறுதிப் போரில் அரச படைகளால் கொன்றழிக்கப்பட்ட தமிழர்களை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் மே 18இல் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவு முற்றம் நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் இரவோடிரவாக சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சின்னமும் அவர்களால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. 15

## பதிவு திருமணத்துக்கு மாத்திரம் அனுமதியாம்

கொழும்பு, மே 14

கொரோனாத் தொற்றுப் பரவலையடுத்து நாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் பயணக் கட்டுப்பாடுகளால் பதிவுத் திருமணம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாள 15

## தையிட்டி திருமண நிகழ்வில் பங்கேற்ற 21 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், மே. 14

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட தையிட்டியில் திருமண நிகழ்வு ஒன்றில் பங்குகொண்ட 21 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 15

## ஓயாத கொரோனா பரவல் நேற்றும் 2,269 பேர் பாதிப்பு

கொழும்பு, மே 14

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 269 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். 15

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்: நீதிமன்ற தடை பெற்றது பொலிஸ்!

முல்லைத்தீவு, மே 14

முள்ளிவாய்க்காலில் எந்த நிகழ்வும் நடத்தக்கூடாது, மக்கள்கூடக் கூடாது, பொது இடத்தில் வைத்து எந்த நினைவுகூரக் கூடாது என்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

அத்துடன், முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலில் ஈடுபட ஐந்து பேருக்கு எதிராகவும் பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் எதிர்வரும் 18ஆம் திகதி நினைவுகூரப்படவுள்ளது. இந்நிகழ்வை தமிழ் மக்கள் நினைவேந்துவதற்கு தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில், முல்லைத்தீவு பொலிஸார் நேற்று முல்லைத்தீவு 15

## யாழில் 58 பேர் உட்பட வடக்கில் 74 பேருக்குக் கொரோனா உறுதி

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 58 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 74 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவை 15

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுக்கவே முடியாதபடி செய்வோம்

### சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 14

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைக்கப்பட்டதைத் தமிழ்த் தேசியகூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என அக்கட்சியின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தச் செயலானது வெறுமனே கல்லிலான ஒரு தூபியை மட்டும் உடைக்கவில்லை இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் இதயங் 15

## விபத்தில் காயமடைந்த தாய் இறந்த மறுநாள் மகனும் உயிரிழந்தார்

வடமராட்சி, மே 14

விபத்தில் படுகாயமடைந்த தாயரும் மகனும் அடுத்தடுத்த நாளில் உயிரிழந்த சம்பவம் வல்வெட்டித்துறையில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி - வல்வெட்டித்துறை - வேம்படியை சேர்ந்த மோகனதாஸ் பிறேமாவதி, அவரின் மகனான மோகனதாஸ் திலீபன் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது:

வல்வெட்டித்துறை வேம்படியைச் சேர்ந்த உறவினர்களான ஏழு பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வழிபாட்டுக்காக காரில் சென்றனர்.

மருதனார்மடம் - உரும்பிராய் வீதியில் கார் சென்றுகொண்டிருந்தபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளா 15

## முடக்க நிலையை கண்காணிக்க 20 ஆயிரம் பொலிஸார் களத்தில்

கொழும்பு, மே 14

நேற்றிரவு முதல் நடைமுறைப்படுத்தப்படும் போக்குவரத்து முடக்கத்தை கண்காணிப்பதற்காக 20,000 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என பொலிஸ்பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து கட் 15

## வர்த்தக நிலையங்களைத் திறக்க மூன்று நாட்களும் அனுமதி மறுப்பு

### பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, மே 14.

நாட்டில் நேற்றிரவு 11 மணி முதல் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரையில் வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படாது என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். 15




## பயண தடையை மீறுவோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

### யாழ். மாவட்ட அரச அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 14

பயணத் தடையை மீறி யாழ்ப்பாணத்தில் பயணிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார். 15



# விமானப்படையினர் தயாரித்த ‘ஒட்சிசன் தெரபி’ ஜனாதிபதியிடம்

கொழும்பு, மே 14

சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகளின் பயன்பாட்டிற்காக இலங்கை விமானப்படையால் தயாரிக்கப்பட்ட வெப்ப ஈரப்பதமூட்டப்பட்ட ஒட்சிசன் தெரபி கருவி (HEATED HUMIDIFIED OXYGEN THERAPY) நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கோவிட் 19 தொற்றுநோய் நிலைமைகளுக்கு மத்தியில் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், புத்தாக்கத் துறையில் சர்வதேச தூதுவரான வித்யா ஜோதி, கலாநிதி பந்துல விஜேயின் எண்ணக்கருவில் பேராசிரியர் ரனில் டி சில்வா மற்றும் வைத்தியர் திலங்க ரத்னபால உள்ளிட்ட முன்னணி மருத்துவ நிபுணர்கள் குழுவின் பங்களிப்புடன் இந்த உபகரணத் தொகுதி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனம் சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகளுக்கு அதிக அளவு கட்டுப்படுத்தப்பட்ட வெப்ப நிலை ஒட்சிசனை முழு ஈரப்பதத்தில் வழங்குகிறது.

விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் சுதர்ஷன பதிரனவின் வழிகாட்டுதலின் பேரில், விமானப்படை கட்டளை அதிகாரி குரூப் கேப்டன் பிரசன்ன மார்டினோவின் மேற்பார்வையில் விமானப்படையின் பொறியியல் பிரிவின் விமான பராமரிப்பு பிரிவினால் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. வரையறைகள், பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் செயல்திறன் தரங்களை சரிபார்த்த பிறகு, இது இலங்கை தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், மொரட்டுவை பல்கலைக் கழகம் இதன் மின் பாதுகாப்பு தரங்களின் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தியுள்ளது.


இந்த சாதனத்தை உற்பத்தி செய்வதற்காக 15 இலட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தாலும், 300,000 இலட்சம் ரூபா என்ற குறைந்த செலவில் உற்பத்தி நடவடிக்கைகள் நிறைவுபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது, 50 உபகரண தொகுதிகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன், சுகாதாரத் துறையின் தேவைக்கேற்ப தொடர்ச்சியாக உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த சாதனத்தின் செயல்பாடு பற்றி ஜனாதிபதி அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, பாதுகாப்பு செயலாளர் (ஓய்வு பெற்ற) ஜெனரல் கமல் குணரத்ன, சுகாதார அமைச்சின் செயலாளர் சஞ்சீவ முனசிங்க மற்றும் விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் டக்ளஸ் தன் சுயநலனுக்காக வலைப்பாடு மக்களை அடகு வைக்கிறார்

## சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு





கிளிநொச்சி, மே14

**வலைப்பாடு மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் செயல்படும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனது சுயநலனுக்காக இந்த மக்களை அடகு வைக்கவும் முயல்கிறார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் குற்றச்சாட்டியுள்ளார்.**

பூநகரியின் வலைப்பாடு கிராமத்தில் வசிக்கும் கடலட்டை மற்றும் கடற்தாவர பண்ணைகளை நடத்தும் மீனவர்களின பிரச்னைகள் தொடர்பாக கள விஜயம் ஒன்றினை நேற்று மேற்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,


வலைப்பாடு கிராமத்திற்கு அருகில் இருக்கும் எருமை தீவு பகுதியில் கடற்தாவர மற்றும் கடலட்டை பண்ணை வளர்ப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு இடையூறாக அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா அத்துமீறிய மீன்பிடியை புகுத்தி தனக்கு இசைவானவர்களுக்கு அந்த வாழ்வாதாரத்தை வழங்கும் வகையில் மேற்கொள்கின்ற செயல்பாடு தொடர்பாக மீனவர்கள் முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

அது மட்டுமின்றி குறித்த மீனவர்கள் இலங்கை அரசின் உடைய 2010 ஆண்டு வர்த்தமானியின் அறிவித்தலின் பிரகாரத்தின் படியே பாசி கடற் தாவரங்கள் வளருகின்ற இடமாக குறிக்கப்பட்ட இந்த இடத்தில் கம்பி வலை பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபடக்கூடாது என வரையறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வரையறுக்கப்பட்ட இடத்தில் அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்கு அமைவாக நூற்றுக்கும் மேற்பட்ட அட்டை பணியாளர்களைக் கொண்ட அட்டைப் பண்ணைகளையும் 40இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாசி பண்ணைகளையும் நடத்தி வருகின்றனர்.

இவர்களின் தொழிலுக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையிலும் மீன்பிடி துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தன்னுடைய சுய நலத்திற்காக இந்த மக்களை அடகு வைக்க முனைகிறார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார். (ஐ)

# பிரிட்டன் தூதுவருடன் சஜித் விசேட சந்திப்பு

## இலங்கைக்கு உதவி வழங்குமாறும் வேண்டுகோள்



கொழும்பு, மே 14

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதன்போது இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த உதவியை வழங்குமாறு பிரிட்டன் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த சில நாட்களாக வெளிநாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களைச் சந்தித்து உதவிகளைக் கோரி வருகின்றார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி மருத்துவர் ஒலிவியா நிவேராஸ், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கினொன் மற்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆகியோருடனும் சஜித் பிரேமதாஸ சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார். (இ)

# பாராளுமன்றம் அடுத்த வாரம் 3 தினங்கள் கூடும் 19-20ஆம் திகதிகளில் ‘துறைமுக நகர்’ விவாதம்

கொழும்பு, மே 14

பாராளுமன்ற அமர்வுகளை அடுத்தவாரம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான மூன்று நாட்கள் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று வியாழக்கிழமை கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கோவிட் 19 சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய பாராளுமன்ற அமர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்களில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவும் இணக்கம் காணப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இதற்கமைய 19ஆம் திகதி விவாதம் முற்பகல் 10 மணி முதல் 5.30 மணிவரையும், 20ஆம் திகதி விவாதம் முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 4.30 வரையும் நடத்தப்படவுள்ளது.

மே 18ஆம் திகதி நடைபெறும் பாராளுமன்ற அமர்வில் நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, நிதிச் சட்டத்தின் கீழான 2 கட்டளைகள், முறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 8 கட்டளைகள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான 2 கட்டளைகள், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பனவிவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு சபை அமர்வுகள் ஆரம்பமானதும் முற்பகல் 11 மணிவரை பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் செயலாளர் நாயகம் தெரிவித்தார். அத்துடன் அன்றையதினம் மாலை 4.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படும்.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்தில், சபை முதல்வரும் வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ , எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நிமல் சிறிபால.டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மஹிந்த அமரவீர, வாசுதேவ நாணயகார மற்றும் அலி சப்ரி ஆகியோரும் பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, ரவூப் ஹக்கீம், அநுரகுமார திஸாநாயக, கயந்த கருணாதிலக, ரஞ்சித் மத்துமபண்டார, மனோ கணேசன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

Eelanadu
14.05.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் மோசமான பலவீனம்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விவகாரமானது, மீண்டும் பிரச்னைக்குரிய விவகாரமாகியிருக்கின்றது. இது தொடர்பில் ஏற்கனவே நாம் எச்சரித்திருந்தோம். நிலைமைகளை நிதானமாக கையாளாவிட்டால், சில பிரச்னைகள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாமல் போகலாம் என்பதை சுட்டிக் காட்டியிருந்தோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் பொதுக்கட்டமைப்பு என்னும் பெயரில் ஓர் அறிக்கை வெளியாகியிருக்கின்றது. அதே வேளை, வடக்கு கிழக்கை சேர்ந்த கத்தோலிக்க ஆயர் மன்றம், பிறிதோர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. குறித்த அறிக்கையில் மே 18ஆம் திகதியை, இனப்படுகொலையை நினைவு கூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுஷ்டிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. பொதுவாக, கத்தோலிக்க ஆயர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக குரல் கொடுப்பவர்கள் என்பதில் முரண்பட ஏதுமில்லை. எனினும், வடக்கு கிழக்கை சேர்ந்த அனைத்து ஆயர்களும் ஒரோமாதிரியான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துபவர்கள் அல்லர். ஆனால், இம்முறை முதல் தடவையாக, மே 18ஆம் திகதியை, இனப்படுகொலை நாளாக நினைவு கூருமாறு அழைப்புவிட்டிருப்பது, சற்று மாறுபட்ட ஒன்றாகவே தெரிகின்றது.

மறைந்த மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு பின்னர், வடக்கு - கிழக்கை சேர்ந்த எந்தவோர் ஆயரும் இராயப்பு ஜோசப் போன்று பேசியதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், வடக்கு - கிழக்கு ஆயர் மன்றமென்னும் பெயரில் தற்போது இவ்வாறானதோர் அறிக்கை வெளியாகியிருக்கின்றது.


ஆனால், இதுதொடர்பில் பேச வேண்டிய, உறுதியுடன் செயலாற்ற வேண்டிய அரசியல் தலைமைகளோ, ஆழ்ந்த மௌனத்திலிருக்கின்றனர். உண்மையில், மேற்குறிப்பிட்டவாறான அறிக்கைகள் வெளிவருவதற்கு முன்னர், தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு, இந்த விடயம் தொடர்பில் உறுதியானதோர் அறிவிப்பை செய்திருக்கவேண்டும். கொரோனா தொற்று மோசமடைந்துசெல்லும் சூழலில், இம்முறை எவ்வாறானதொரு முறைமையின்கீழ் இந்த விடயம் கையாளப்பட வேண்டும் - மக்கள் என்ன செய்யவேண்டும் - என்பது தொடர்பில், அரசியல் தலைமைகள் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அதேவேளை, கொரோனா தொற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தடைகள் இருக்கின்ற நிலையில், இந்த விடயத்தை தாம் எவ்வாறு கையாளப் போகின்றோம் என்பது தொடர்பில் அரசாங்கத்துடனும் பேசியிருக்க வேண்டும். அரசாங்கம் நினைவுகூரல் தொடர்பில் எவ்வாறான நிலைப்பாடுகளையும் கொண்டிருக்கலாம். ஆனால், அரசாங்கத்துடன் பேசவேண்டியது ஒரு மக்கள் தலைமையின் கடப்பாடாகும்.

ஆனால், இங்கு விடயங்களோ, தலைகீழ் நிலையில் இடம்பெறுகின்றன. மக்களை வழிநடத்த வேண்டிய அரசியல் தலைமைகள் என்போர் அமைதியாக இருக்கின்றனர். ஆனால், ஆயர்களும் கததோலிக்க மதகுருக்களும் பேசிக்கொண்டிருக்கின்றனர். மக்கள் என்ன செய்யவேண்டுமென்று அவர்கள் கூறுகின்றனர். அவ்வாறாயின், தமிழ் சமூகத்தில் அரசியல் தலைமைகளின் பொறுப்பு என்ன?

இந்த அரசாங்கம் நினைவுகூரல் விடயத்தில் மாறுபட்ட அபிப்பிராயத்தையே கொண்டிருக்கின்றது. அதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றது. அவ்வாறான சில வாக்குறுதிகளுடன்தான் அரசாங்கம் ஆட்சியமைத்திருக்கின்றது. இந்த நிலையில், அரசாங்கம் தடைகளை ஏற்படுத்துகின்றதென்று கூறுவதில் பொருளில்லை. தற்போதைய கொரோனா நிலவரம், அரசாங்கத்திற்குத்தான் முற்றிலும் சாதகமாக இருக்கின்றது.

# முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் ஆதங்கம்!

- அலசுவது **இராஜதந்திரி** -



அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனிடம் இன்றைய அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்று தனது மன ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார். முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் ஆதங்கம் தென்னிலங்கையில் உள்ள மக்களின் உள்ளக்கிடக்கையை பெரிதும் பிரதிபலிப்பதாகவே அமைந்திருந்தது.

முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் மன ஆதங்கத்தை உற்றுநோக்கினால் அழுவதா அல்லது சிரிப்பதா என்று தெரியாதுள்ளது. ஆனந்த தேரர், இன்றைய அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் கூறியிருந்தார்.

ஆனால், இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவோர் அரசாங்கமாவது அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ இலங்கையை ஒரு வெற்றிபெற்ற நாடாக மாற்றியமைக்க முடிந்ததா என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

**தோல்வியுற்ற நாடு**

அனைத்து ஆட்சியாளர்களும் இலங்கையை ஒரு “தோல்வியுற்ற நாடாக“ மாற்றுவதிலேயே வெற்றி கண்டுள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்து 70 வருடங்களுக்கும் மேலாகியுள்ளது. ஆனால், இந்த 70 வருடங்களில் இலங்கைக்குப் பின்னர் சுதந்திரம் பெற்ற நாடுகள் பல மிகச்சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளன. ஆனால், இலங்கை ஆங்கிலேய ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார ரீதியான கட்டுமானங்களைக்கூட உரிய முறையில் வளர்த்தெடுக்க முடியாது “பிச்சா பாத்திர“மேந்திய நிலையில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த சமயத்திலேயே அடிப்படை அரசியல் பிரச்னையான இனப்பிரச்னைக்கு ஒர் உறுதியான தீர்வு எட்டப்பட்டிருந்தால் இலங்கை இன்று தென்னாசிய பிராந்தியத்தில் இன ஒற்றுமையோடு ஒரு சிறப்புற்ற நாடாக, சிங்கப்பூரைப்போன்று மாற்றமடைந்திருக்கும்.

**சீனாவின் கொழும்பு துறைமுக நகரம்**

ஆனால், இனப்பிரச்னையை முன்னிலைப்படுத்தியே அரசியல் நகர்வுகளை முன்னெடுத்த இலங்கையின் ஆட்சியாளர்கள், இன்று அதள பாதாளத்தில் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இலங்கையை வீழ்த்தியுள்ளனர். இப் பரிதாபகரமான நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்தியே சீனா, கொழும்பு துறைமுக நகர விஸ்தரிப்பு திட்டத்தை முன்னெடுத்து, தனக்கென இலங்கையின் தலைநகர கரையோரத்துக்கப்பால் 2.69 கிலோ மீட்டர் விஸ்தீரணத்தில் ஒரு புதிய நிலப்பிரதேசத்தை அமைத்து வருகின்றது.

எனவே, சீன ஆதிக்கம் இலங்கையர் மத்தியில் ஏற்படுத்தியுள்ள மனக் கிலேசத்தையே அபயராம விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் கூறியவை எடுத்துக்காட்டுகின்றது.

தென்னிலங்கையில் இன்றைய ஆட்சியாளர்மீது அதிருப்தி கொண்டுள்ளோர், கொழும்பு துறைமுக நகர வேலைத் திட்டத்தை சீனாவின் ஒரு நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே கருதுகின்றனர். ஆனால், இலங்கையின் சுபீட்சத்துக்கு பாதகமாக இருக்கின்ற அடிப்படைக் காரணமான இனப் பிரச்னை குறித்து முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சுமந்திரனிடம் எதனையும் பெரிதாக குறிப்பிடாதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

**ஓநாய் அழுத கதை**


பல வருடகாலமாக எவ்வித விசாரணைகளுமின்றி சிறைகளில் வாடி வதங்கும் தமிழ் அரசியல் கைதிகள், மூன்று தசாப்த கால யுத்தத்தின்போது மட்டுமல்ல. 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போதுகூட ஏராளமானவர்களை ஆயுதப்படையினர் கேட்டுக்கொண்டதன் பேரில் சரணடைய வைத்து, இன்றுவரை சரணடைந்தோர்பற்றி அறிய முடியாது தவிக்கும் சரணடைந்தோரின் உறவுகள் குறித்து, முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எவ்வளவு தூரம் அறிந்து வைத்துள்ளார் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

இந்நிலையில், நாடு தோல்வி கண்டுள்ளதாகவும் அதுகுறித்து தாம் கவலை கொண்டுள்ளதாகவும் ஆனந்ததேரர் கூறியுள்ளதை அவதானிக்கும்போது, “ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுதது“ போன்றே காணப்படுகின்றது.

சுமந்திரனிடம் பேசிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சீனாவின் ஆக்கிரப்பு, மற்றும் கோவிட்-19 வியாதி உட்பட, நாடு எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளை எதிர்கொள்ள இன, மொழி பேதங்களை கடந்து அனைத்து மக்களும் ஒன்றுபட வேண்டுமெனக்குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், தமது உறவுகள் வருடக்கணக்கில் நீதி விசாரணைகளின்றி சிறைகளில் இருக்கின்றமை மற்றும் ஏராளமானோர் காணாமல் போயுள்ளமைபோன்ற பெருந்துயரங்களோடு பரிதவித்து நிற்கும் வடக்கு-கிழக்கின் மக்களுக்கு வேண்டிய நீதி கிடைக்காதவரை, நாட்டின் பொது எதிரிகள் என்று கண்டறியப்பட்டவற்றை வெற்றி கொள்வது சாத்தியப்படாத விடயம் என்பதை முருத்தெட்டுவே ஆனந்த தேரரும் அவரைச்சந்தித்த பாராளுமன்ற உறுப்பினன் சுமந்திரனும் அறிந்து கொள்ள வேண்டியவராகின்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 14 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - சித்திரை - 31
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சூன்ய




14.05.2021

**மேடம்**
குடும்பத்தில் வந்த பிரச்னைகள் விலகும். நிம்மதி கூடும். கணவன் மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். குதூகலமான நாள். வரவுக்கு மிஞ்சிய செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். கவலை நீங்கும்.

**இடபம்**
பிள்ளைகளால் மற்றவர்கள் மத்தியில் பெருமிதம் கூடும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு அழகான வாரிசு உருவாகும். கடனில் ஒரு பகுதியை அடைக்க நிதி வசதி வரும்.

**மிதுனம்**
பிள்ளைகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். நேற்றைய கவலை தீரும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். மகிழ்ச்சி கூடும்.

**கடகம்**
திட்டங்களை தீட்டி குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். கணவன் மனைவி இடையே இருந்து வந்த வருத்தங்கள் நீங்கும். வீண்பழி, மனஅழுத்தம், ஏமாற்றம் அனைத்தும் மறையும்.

**சிம்மம்**
மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். திடீர் நன்மைகள் வந்து சேரும். ஒரே நேரத்தில் பல வேலைகளை இழுத்துப் போட்டு பார்ப்பீர்கள். அலுவலகத்தில் தேவையற்ற பிரச்னைகள் வந்து போகும்

**கன்னி**
பிள்ளைகள் உங்களைப் புரிந்து கொள்ளத் துவங்குவார்கள். செலவுகள் இருக்கும். சின்ன சின்ன மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். மனதில் ஆன்மிக சிந்தனை ஏற்படும். மனக்கட்டுப்பாடு அதிகரிக்கும்.

**துலாம்**
நல்ல காரணங்களுக்காகப் பிள்ளைகள் உங்களைப் பிரிவார்கள். வேலை இல்லாதவர்களுக்கு இன்று நல்ல வேலை கிடைக்கும். முடிந்த வரையில் செயல்களில் கவனம் செலுத்துங்கள்.

**விருச்சிகம்**
யாரிடமும் எதற்காகவும் வாக்குக் கொடுக்க வேண்டாம். இன்று எதிர்பாலினத்தினரிடம் பேசும் போது கவனம் தேவை. தடைகள் விலகும். உதவி கிடைக்கும்.உதவிகள் மூலம் பணம் வரும்.

**தனுசு**
செய்ய வேண்டிய நேர்த்திக்கடனை உடனே முடிப்பீர்கள். குடும்ப விவகாரத்தில் மூத்த சகோதரர் பக்கபலமாக இருப்பார். இன்று இளைய சகோதரருடன் உரசல் வந்து நீங்கும்.

**மகரம்**
கணவன் மனைவி இடையே விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி கூடும். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காதீர்கள்.

**கும்பம்**
மற்றவர்களின் தவறுக்கு நீங்கள் ஆளாக நேரிடும். கவனம் தேவை. துணிச்சலான முடிவுகள் எடுக்கு முன் பிறரிடம் ஆலோசனை பெறுங்கள்.யாரையாவது ஒதுக்க முடிவெடுக்குமுன் யோசியுங்கள்.

**மீனம்**
இன்று புதிய இனங்களில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். உங்களின் கீழ் வேலை பார்ப்பவரிடம் விட்டுக் கொடுத்து செல்வீர்கள். சிறிய அளவில் விரயம் வரும். மனதில் சந்தோஷம் நிறையும்.

# கமலின் கட்சியிலிருந்து மேலும் இரு பிரமுகர்கள் வெளியேறினர்

## மக்கள் நீதி மையம் கட்சியில் தொடரும் குழப்பம்

சென்னை, மே 14

நடிகர் கமல் ஹாசன் தொடங்கிய மக்கள் நீதி மையம் கட்சியில் இருந்து சமூக ஊடகப் பிரபலம் பத்ம பிரியா, முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்தோஷ் பாபு ஆகியோர் விலகியுள்ளனர்.



சட்டமன்றத் தேர்தலில் கமலின் கட்சி படுதோல்வியடைந்த நிலையில், முக்கிய பொறுப்புக்களில் இருந்த பலர் வெளியேறி வரும் நிலையில், இவ்விருவரின் வெளியேற்றம் கட்சிக்குள் தொடரும் குழப்ப நிலையை வெளிப்படுத்தியுள்ளது.

கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தே விலகுவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் ஐ.ஏ. எஸ். அதிகாரியுமான சந்தோஷ் பாபு நேற்று அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், “மக்கள் நீதி மய்யத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் எனது பதவியிலிருந்தும் விலகுவதாக கனத்த மனதுடன் அறிவிக்கிறேன். தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த முடிவை எடுத்திருக்கிறேன். கமலும் அவருடைய அணியினரும் என் மீது காட்டிய அன்புக்கும் நட்புக்கும்நன்றி”எனகுறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த வாரம் டாக்டர் மகேந்திரன் கட்சியை விட்டு விலகிய போது, தான் கமல்ஹாசனுடன் தொடரப்போவதாக கூறியிருந்தார் சந்தோஷ் பாபு. இருந்த போதிலும் நேற்றைய தினம் அவரும் வெளியேறியுள்ள போதிலும், அதற்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை.

கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த பிறகு, அக்கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டது. இந்தத் தோல்வி குறித்து விவாதிப்பதற்காக கடந்த வாரம் வியாழக்கிழமை அக்கட்சியின் உயர் மட்டக் குழுக் கூட்டம் கூடியது. இதில் அக்கட்சியின் நிர்வாகிகளிடமிருந்து ராஜினாமா கடிதங்கள் பெறப்பட்டன. அப்போது அக்கட்சியின் துணைத் தலைவராக இருந்த டாக்டர் மகேந்திரன் கமல்ஹாசனுக்கு விரிவான கடிதம் ஒன்றை எழுதி விட்டு, கட்சியை விட்டே வெளியேறினார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் திருத்தம் செய்வதை விமர்சித்து வெளியிட்ட சமூக ஊடகப் பதிவு மூலமாக பிரபலமடைந்த பத்ம பிரியா மக்கள் நீதி மையத்தின் சுற்றுச் சூழல் அணி மாநிலச் செயலாளர் பொறுப்பில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் விலகுவதாக நேற்று அறிவித்தார். தனிப்பட்ட காரணங்களாலேயே வெளியேறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா தடுப்பு பணிக்காக ஒரு கோடி நிதி அளித்த நடிகர் சிவக்குமார் குடும்பம்

சென்னை, மே 14

கொரோனா தொற்று தடுப்பு பணிகளுக்காக தமிழக முதமைச்சரின் பொதுநிவாரண நிதிக்கு நடிகர் சிவக்குமார் குடும்பத்தினர் நேற்று ரூ.1 கோடி நிதியுதவி அளித்தனர்.



கொரோனாநோய்த்தொற்றை எதிர்கொள்வதற்காக தாராளமாக நிதி அளிக்கலாம் என்று கொடையாளர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில் நடிகர் சிவகுமார் தனது குடும்பத்தினர் சார்பில் கொரோனா தடுப்பு பணிகளுக்காக முதலமைச்சர் பொதுநிவாரண நிதிக்கு ரூ.1 கோடி நிதியுதவி அளித்துள்ளார். இது தொடர்பாக நடிகர்கள் சிவகுமார், சூர்யா, கார்த்தி ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று நேரில் சந்தித்து நிவாரண நிதியை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து பேசிய நடிகர் சிவகுமார், கொரோனா தொற்றுக்கு எதிரான நடவடிக்கைக்கு உதவுவதற்காக தங்களால் முடிந்த நிதியை அளித்ததாகவும், கொரோனா தொற்றிலிருந்து மக்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# அம்புலன்சில் மேலும் 3 பேர் உயிரிழப்பு படுக்கை வசதி இல்லாததால் பரிதாபம்!

சென்னை மே 14

சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் மேலும் 3 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர். ஒட்சிசன் படுக்கைகள் இல்லாத காரணத்தால் அம்புலன்சிலேயே உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே 6 பேர் இறந்த நிலையில் நேற்று மேலும் 3 பேர் உயிரிழந்தனர்.



ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் 845 படுக்கைவசதி உள்ளன. இந்த அனைத்து படுக்கைகளும் நிரம்பியதால் புதிதாக வரும் நோயாளிகள் பல மணி நேரம் அம்புலன்சிலேயே காத்திருக்கின்றனர். ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் கொரோனாவுக்காக சிகிச்சை பெற வருவோர் எண்ணிக்கை தொடர்ந்து ஏறுமுகத்திலேயே இருக்கிறது. ஆம்புலன்சுகள் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையே சுற்றி சுற்றி வருகின்றன.

கொரோனா 2 ஆவது அலை தமிழகத்தை ஆட்டி படைத்து வருகிறது. தினசரி 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவின் பிடியில் சிக்கி வருகிறார்கள். சென்னையில் கொரோனாவின் தாக்கம் மிக அதிகமாக இருக்கிறது. தினம் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றால் பாதிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக அரசு, தனியார் மருத்துவமனைகள், சிறப்பு மையங்கள் கொரோனா நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன.

## பாசிச ஆட்சியின் வெளிப்பாடு
### தமிழ் தேசிய வாழ்வுரிமை கட்சி

மன்னார், மே 14

மிகப் பெரிய தமிழின படுகொலையின் சாட்சியாகிய முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இனப்படுகொலைக்கு உள்ளாக்கியவர்களே இரவோடு இரவாக இடித்து அகற்றியமை பாசிச ஆட்சியின் வெளிப்பாடாக உள்ளது என்று தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி. எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:

அழுவதற்குக்கூட அழித்தவனிடம் அனுமதி கோரும் துர்ப்பாக்கிய நிலையில் தமிழர்களின் வாழ்வியல் காணப்படுவதே மிகுந்த துர்ப்பாக்கியம்.

இன அழிப்பு யுத்தம் முடிவுற்று 12 ஆண்டுகள் கடந்தும் இன்னும் இராணுவ அடக்குமுறையும் அதன் மேட்டிமைவாத கட்டமைப்புக்களும் தமிழ் மக்களுக்கு தொடர் அச்சுறுத்தலாகவே காணப்படுகிறது.

கடந்த 12 ஆண்டுகளாக நீதி கோரி உலகின் சகல வாயில்களையும் தட்டிய எம்மினம் உறவுகளுக்காக பொது வெளியில் ஓலமிட்டு அழ முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டது என்பது உலகில் எந்த இனத்திற்கும் ஏற்படக்கூடாத பெரும் சாபமே. ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேருக்கான பதிலை அரசு என்றோ ஒரு நாள் பதில் கூறியே ஆக வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# நினைவுத்தூபியையே இடித்தழிக்கும் இவர்களா மனிதாபிமான போரை முன்னெடுத்திருப்பார்கள்?

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கேள்வி



யாழ்ப்பாணம், மே14

**“உயிர் துறந்துபோன ஆத்மாக்களை ஆத்மார்த்தமாக நினைவுகூருவதற்கு அமைக்கப்பட்ட நினைவுத்தூபியையே வெறித்தனத்துடன் இடித்தழிக்கும் இராணுவம், போரின்போது தமிழ் மக்களை எப்படிக் கொன்று குவித்திருக்கும் என்பதை உலகம் உணர்ந்துகொள்ள வேண்டும். இலங்கை அரசுக்கு இனியும் தாலாட்டு பாடிக் கொண்டிருக்காது இறுக்கமான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்.”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி சேதமாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழரின் அடையாளம். எங்கள் உறவுகள் குருதிகள் கொப்பளிக்க கொல்லப்பட்ட தேசம். இனப்படுகொலையை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் மண். சிறிலங்கா அரசின் வெறியாட்டத்தால், சிங்கள - பௌத்தத்தின் வழி வந்து மகாவம்ச வரலாற்றில் ஊறிய படைகளால் தமிழர்கள் துடிக்கடிக்கத் துடிக்க கொல்லப்பட்ட நிலம். இறுதிப் போரின் அடையாளமாக இன்றும் இருப்பது முள்ளிவாய்க்கால்.

இனப்படுகொலையின் அடையாளமாகவும், எங்கள் உறவுகள் கண்ணீர்விட்டுக் கதறியழுது மன ஆறுதலடைவதற்காகவும் அந்த மண்ணில் அமைக்கப்பட்டதே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் சிங்கள அரசுகளை எப்போதும் கிலி கொள்ளச் செய்தே வந்திருக்கின்றது. தடைகளால் நினைவேந்தலை முடக்க முயல்பவர்கள் இம்முறை அடையாளத்தையே அழித்தொழிக்க முயன்றிருக்கின்றார்கள்.

வரலாறுகளை அடுத்தடுத்த சந்ததிக்கு கடத்தும் வேர்கள் இந்த நினைவுத்தூபிகள். இவற்றைத் துடைந்தெறிந்தால் தமிழர் மனங்களிலிருந்து அந்த முள்ளிவாய்க்கால் என்னும் ஆறாத வடுவை காணாமல் ஆக்கிவிடலாம் என்று சிங்கள அரசும், இராணுவமும் கணக்குப்போடுகின்றது.

அதற்காகவே இரவோடு இரவாக இராணுவத்தின் படைபட்டாளம் காவல் காத்து நிற்க, நினைவுத்தூபி சேதாரமாக்கப்பட்டுள்ளது. நடுகைக் கல் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

கல்லறைகளை, மக்களின் உயிரிழப்புக்குச் சாட்சியான நினைவுத் தூபிகளையே கொலை வெறியோடு வீழ்த்திச் சரிக்கும் இவர்களா மனிதாபிமான போரை நடத்தியிருப்பார்கள்? மனச்சாட்சியுள்ளவர்களாக இருந்திருந்தால் எங்கள் அஞ்சலி உரிமையைதானே அனுமதித்திருப்பார்கள்?

யாருமற்ற - எந்தக் கண்காணிப்புமற்ற - சாட்சியமற்ற போரின்போது இவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்பதை இப்போது உலகின் கண்களுக்கு காட்டியிருக்கின்றார்கள். தங்களின் குரூர முகம் இதுதான் என்பதை முரசறைந்து சொல்லியிருக்கின்றார்கள். புத்தனின் வழியில் நடப்பதாகச் சொல்லும் இவர்கள் அவனை எட்டி உதைப்பதே தங்கள் கொள்கை என்பதை பறைசாற்றியிருக்கின்றார்கள்.

ஈழத் தமிழர்கள் இலங்கையில் வேரறுக்கப்படுகின்றார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும். இனியும் உள்ளக விசாரணை என்று சொல்லிக் கொண்டும், தடயங்களைச் சேகரிக்கின்றோம் என்று கதையளந்து கொண்டும் இருக்காமல், இருக்கின்ற இருப்பையே ஆழமாய் தோண்டி அவர்கள் அழிக்க முன்னர் நீதியை நிலைநாட்டுங்கள் என்று உலக நாடுகளிடம் உரக்கக்கேட்கின்றோம்” - என்றுள்ளது. (இ)

# தொற்றாளர் கூடிய மாகாணமே தடுப்பூசி ஏற்றலில் முதல் தெரிவு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 14

“கொரோனா வைரஸ் தொற்றாளர் எண்ணிக்கை கூடிய மாகாணங்களிலேயே தடுப்பூசி முதல் கட்டமாக ஏற்றப்படும்.”

- இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் மக்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாண மக்களுக்கு எப்போது தடுப்பூசி ஏற்றப்படும் என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“புத்தாண்டுக் கொத்தணி எல்லா மாவட்டங்களிலும் பரவலடைந்துள்ளது. இந்த நிலையில் முதல் கட்டமாக மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை தடை செய்துள்ளோம்.

கொரோனாத் தொற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மாகாணமாக மேல் மாகாணமே காணப்படுகின்றது. இந்த நிலையில் முதல் கட்டமாக அந்த மாகாணத்தில் அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களை கண்டறிந்து அந்த மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றும் பணிகளை முன்னெடுக்கின்றோம்.

அதற்கு அடுத்தபடியாக தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மாகாணங்கள் அடையாளம் காணப்பட்டு அந்த மக்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றுவோம்.

எதிர்வரும் நாள்களில் வெளிநாடுகளிலிருந்து நாம் எதிர்பார்க்கின்ற தடுப்பூசிகள் வந்தடையவுள்ளன” - என்றார். (இ)

### கொரோனாவின் தீவிரத்தால் இலங்கையில் தங்கியுள்ள
# வெளிநாட்டு பயணிகளின் வீஸா காலம் 2 மாதம் நீடிப்பு

கொழும்பு, மே 14

இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பயணிகளின் வீஸா காலம் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இலங்கையில் தங்கியிருப்போர் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வீஸா காலம் நிறைவடைந்திருப்பின், எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வீஸா புதுப்பிக்கப்படாத காலத்துக்கு தண்டப்பணம் விதிக்கப்பட மாட்டாது என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.(இ)


# மரண அறிவித்தல்

**தோற்றம்**
16 - 02 - 1939



**உதிர்வு**
09 - 05 - 2021

## பேரின்பநாயகம் சுப்பையா

யாழ். கருணையம்பதியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சுப்பையா பேரின்பநாயகம் அவர்கள் 09-05-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா – கற்பகம் தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் – மீனாட்சி தம்பதியரின் மூத்த மருமகனும், புவனேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும், கௌரி, உத்தமசீலன் ஆகியோரின் அருமைத் தந்தையும்,குகநேசன், மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் இந்திராணி, சித்திவிநாயகம், ஸ்ரீரங்கநாதன், திலகவதி ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நடராஜா, சுப்ரமணியம் மற்றும் தர்மலிங்கம், சுந்தரலிங்கம், ராஜலிங்கம், இன்பராணி, காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், நாகேஸ்வரி, மல்லிகாதேவி, சோதிலிங்கம் மற்றும் பாஸ்கரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வாகீஸ், பிரகாஸ், இசையாழன், இசைமாறன் ஆகியோரின் ஆருயிர்ப் பேரனும், ராஜபுஸ்பம், அருள்மொழி, புஸ்பராஜா, புஸ்பவதி, புஸ்பரதி, நிசாந்தினி, புஸ்பவதனா, நிசாந்தன், காலஞ்சென்றவர்களான சுதாகர், ரமணன் மற்றும் டெனிஸ், அருணகிரி, அபிராமி, கௌதமன், சஞ்சுவி, குகனந்தினி, கஜந்தன் ஆகியோரின் அன்பு மாமானாரும், மோகனலால், மோகனரூபன், மோகனதீபன், ராஜி, ரமணன், மோகனதீபா, மோகனரூபா, கௌதமன், ரங்கன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சீலன் - மகன் +16475341437**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# அத்தியாவசிய சேவையினரை தவிர வேறுயாரும் வெளியே வரமுடியாது

## இராணுவத் தளபதி திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, மே. 14

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோரைத் தவிர ஏனைய அனைவரும் நேற்று இரவு 11.00 மணி முதல் மூன்று நாட்களுக்கு வீடுகளை விட்டு வெளியே றவோ, வீதிகளில் நடமாடவோ முற்றாகத் தடை விதிக்கப்படும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெளிவுபடுத்தியுள் ளார். அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்கள், வெளிநாட்டுப் பயணத்திற்காக விமான நிலையத் திற்குச் செல்வோர் மற்றும் மருத்துவ சிகிச் சைக்குச் செல்வோர் பயணக் கட்டுப்பாடு அமு லில் இருக்கும் இந்தக் காலப்பகுதியில் பயணம் செய்ய அனுமதிக்கப் படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

மற்றவர்கள் அனை வரும் வீடுகளிலேயே இருக்க வேண்டும் எனவும் அவர் வலி யுறுத்தினார்.



புதிய கட்டுப்பாடுகள் நேற்று இரவு 11.00 மணிக்கு அமுலுக்கு வந்து திங்கள் காலை வரை தொடரும் என அறிவிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இ.போ.ச. பஸ் சேவைகள் 3 நாள்கள் இடம்பெறாது

கொழும்பு, மே. 14

நாடுமுழுவதும் போக்கு வரத்து கட்டுப்பாடு காரண மாக நேற்று வியாழக்கிழமை இரவு 11 மணி முதல் வரும் மே 17ஆம் திகதி திங்கட் கிழமை அதிகாலை 4 மணி வரை பஸ் சேவைகள் நடை பெறாது என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரி வித்துள்ளது.

அதன் உதவிப் பொது முகாமையாளர் தவானா பாண்டுக ஸ்வர்ணஹன்ச இத னைத் தெரிவித்தார்.

இன்று ஒரு விடுமுறை நாளாக இருக்கும் என்றும், பயணம் தடை செய்யப்பட் டுள்ளதால் பொதுமக்களுக்கு போக்குவரத்து தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

இருப்பினும், அத்தியாவ சிய கடமைகளைச் செய்ய வரும் சுகாதார மற்றும் பாது காப்புப் பணியாளர்கள் தங்கள் தேவைகளின் அடிப்படை யில் கோரிக்கை விடுத்தால், அவர்களுக்கு பஸ் சேவைகள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வவுனியா கொரோனா சிகிச்சை மையத்தை நேரில் பார்வையிட்ட வட மாகாண ஆளுநர்

வவுனியா, மே. 14

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் அமைக்கப் பட்ட கொரோனா சிகிச்சை நிலையத்தை பார்வையிட்ட வடமாகாண ஆளுநர் பீ.எஸ். எம்.சார்ள்ஸ், சிகிச்சை நிலையத் துக்குத் தேவையான ஒரு தொகுதி பொருட்களையும் கையளித்தார்.

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் 200 கட்டில் களைக் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு நேற்று முன் தினம் மாலை விஜயம் செய்த வடமாகாண ஆளுநர், அதன் கட்டுமானப் பணிகளை பார்வை யிட்டதுடன், கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு வரும் நோயாளருக்கு தேவையான ஒரு தொகுதி பொருட்களையும், வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன மற்றும் வவுனியா மாவட்ட கொவிட் செயலணியின் இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜென ரல் டி.எம்.எச்.டி.பண்டாரா ஆகியோரிடம் கையளித்தார்.



அத்துடன், சிகிச்சை நிலைய வசதிகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் தொடர்பிலும் அரச அதிகாரி கள், சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடி னார்.

# ஆராதனையில் கலந்துகொண்ட தம்பதியினருக்கு கொரோனா

கொழும்பு, மே. 14

மெய்நிகர் சந்திப்பு (Zoom) ஊடாக மதபோதகர் ஒருவர் நடத்திய ஆராதனையில் கலந்துகொள்வதற்காக வெல லம்பிட்டியில் உள்ள வீடொன றுக்கு சென்ற தம்பதியினருக்கு பி.சி.ஆர் பரிசோதனையின் போது கோவிட் 19 தொற்றிருப் பது உறுதி செய்யப்பட்டுள் ளது.

மேற்படி இடத்திற்கு சென்று ஆராதனையில் கலந்துக் கொண்டவர்களை வெல்லம் பிட்டி பொது சுகாதார பரி சோதகர்கள் 14 நாட்கள் தனி மைப்படுத்தினர்.

மெய்நிகர் முறைமை ஊடாக ஆராதனை நடத்திய மதபோத கர் எச்சரிக்கப்பட்ட அதே வேளை, மேலதிக விசார ணைக்காக பிரதான சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத் தில் முன்னிலையாகுமாறும் அவர் அறிவுறுத்தப்பட்டுள் ளார்.

அத்துடன் அந்த பிரதேசத் தில் கொவிட் தொற்றினால் உயிரிழந்த நபரொருவரின் குடும்பத்தார் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

எனினும் அவர்கள் அதனை பொருட்படுத்தாது வெளியில் சென்று வருவதாக அப்பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அவர்களின் இந்த செயலி னால் தங்களின் உயிருக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டி ருப்பதாக பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவில் 19 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

வவுனியா, மே. 14

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவில் 2 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 19 குடும்பங்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிடாச்சூரி, கோதண்டர் நொச் சிக்குளம் ஆகிய இரு கிராமங் களில் 2 கொரோனா சமூகத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர் களுடன் தொடர்பைப் பேணிய 19 குடும்பங்கள் சுகாதார பிரி வினரால் தனிமைப்படுத்தப்பட் டுள்ளன. குறித்த பிரதேசத்தில் எழு மாறாக மேற்கொள்ளப் பட்ட பிசிஆர் பரிசோதனை யின் போதே இவ்விரு தொற்றா ளர்களும் அடையாளம் காணப் பட்டிருந்தனர்.

அத்துடன், இவர்களில் ஒருவர் சிறுநீரக நோய் காரண மாக வவுனியா வைத்தியசாலை யில் 40 நாட்களாக சிகிச்சை பெற்று வீடு திரும்பியவராவார். குறித்த நபரை பார்வையிடுவதற் காக சென்ற நபர்களே இவ் வாறு தனிமைப்படுத்தப்பட்டுள் ளனர்.

# மட்டு. சந்திவெளியில் இரு குழுக்கள் மோதல்

## இருவர் வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, மே. 14

மட்டக்களப்பு - சந்திவெளி பகுதியில் இரு குழுக்களுக் கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில், இருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி வைத் தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை, சந்திவெளி - பாலையடித்தோனா பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத் தில் 21 வயது மற்றும் 22 வயது டைய இளைஞர்களே படுகாய மடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நிகழ்ந்த மைக்கு தனிப்பட்ட பிரச்னை மற்றும் கருத்து மோதல் ஆகிய வையே காரணமென பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசார ணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை ஏறாவூர் பொலி ஸார் முன்னெடுத்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சூறாவளி ஏற்பட சாத்தியம்

கொழும்பு, மே. 14

சவுதி அரேபிய கடற்பரப்பில் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட தாழ் அமுக்கம் காரணமாக சூறா வளி தாக்கம் உருவாகியுள்ளது.

அடுத்து வரும் சில தினங்களில் இந்தத்தாக்கம் தீவிரம் பெற்று இலங்கையின் வடக்கு மேற்கு நோக்கி கடக்கலாம் என வளி மண்டலவியல் திணைக்களம் அறி வித்துள்ளது.

இன்று முதல் இந்தத் தாழ முக்கம் மேலும் தீவிரமடையலாம். தீவிரம் பெற்ற சூறாவளி இலங்கை யின் வடக்கு மேற்கு நோக்கி திசையூடாக கடக்கும் என திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

இதனால், அடுத்து வரும் சில தினங்களில் காங்கேசன்துறையில் இருந்து மன்னார் வரையும், கொழும்பு, காலி ஊடாக அம்பாந் தோட்டை வரையும் உள்ள கரை யோரப்பிரதேசங்களில் கடல் சற் றுக் கொந்தளிப்பாக இருக்கும் என அறிவிக்கப்படுகின்றது.

இந்த நாட்களில் குறிப்பிட்ட பிரதேசங்களில் கடற்றொழில் மற்றும் கடல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என திணைக் களம் வேண்டுகோள் விடுத்துள் ளது.

தற்சமயம் இந்தக் கடற்பரப்புக் களில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் உடனடியாக கரைக்கு வரும்படி திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# 11 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டன

கொழும்பு, மே 14

நாட்டில் மேலும் 3 மாவட் டங்களை சேர்ந்த மேலும் 11 கிராம உத்தி யோகத்தர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்படு வதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித் தார்.

அதேபோல், 3 மாவட்டங் களைச் சேர்ந்த 4 கிராம உத்தி யோகத்தர் பிரிவுகள் தனி மைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

புதிதாக தனிமைப்படுத் தப்படும் பிரதேசங்கள் கம்பஹா மாவட்டத்தின், திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட- பாலுக ஹவெல கிராம சேவகர் பிரிவு -

காலி மாவட்டத்தின், அஹங்கம பொலிஸ் பிரி விற்கு உட்பட்ட- கரந்துங் கொடை கிராம சேவகர் பிரிவு, கொவிய பான கிராம சேவகர் பிரிவு, கஹவன்னகம கிராம சேவகர் பிரிவு, தொம்மங்கொட கிராம சேவகர் பிரிவு -

ஹபராதுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட - லுனு மோதர கிராம சேவகர் பிரிவு, பொனவிஸ்டா கிராம சேவ கர் பிரிவு, கட்டுகுருந்த ஆகிய பிரிவுகள் -

இரத்தினபுரி மாவட்டத் தின், பெல்மடுல்ல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட- தெனக வக்க பாதகட கிராம சேவகர் பிரிவு, திப்பிடிகல கிராம சேவகர் பிரிவு,

குருவிட்ட பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட- குருவிட்ட கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட தெல்கமுவ பிரி வின் நகரப் பகுதி ஆகிய பிரதேசங்கள் தனிமைப்படுத் தப்படுகின்றன.

தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படும் பிரதேசங்கள் -

கொழும்பு மாவட்டம், பதுக்கை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட உக்கல்ல கிராம சேவகர் பிரிவு -

அம்பாறை மாவட்டம், தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தெஹி யத்தகண்டிய கிராம சேவகர் பிரிவு,

நுவரெலியா மாவட்டம், ஹட்டன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட போடைஸ் தோட்ட கிராம சேவகர் பிரிவின் கோன கல பிரிவு மற்றும் போடைஸ் கிராம சேவகர் பிரிவின் 30 ஏக்கர் பிரிவு ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுவதாக இராணு வத் தளபதி தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்காலில் நினைவுச் சின்னம் இடித்தழிக்கப்பட்டது நாகரிகமற்ற செயல்

## தமிழ் தேசிய கூட்டமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம், மே 14

**முள்ளிவாய்காலை சுற்றி இராணுவமும் பொலிஸூம் குவிக்கப்பட்டிருக்க முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னங்கள் இரவோடிரவாய் அழிக்கப்பட்டிருப்பது நாகரிகமற்ற செயல் எனத் தெரிவித்துள்ள தமிழ் அரசுக் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணைத் தலைவருமான மாவை சேனாதிராசா, இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என கூறியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, நேற்று காலையில் மேலும் ஒரு நெஞ்சை உலுக்கும் செய்தி கிடைத்தது. மே-18 முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நிலைநட்டுள்ள சின்னங்கள் சிதைக்கப்பட்டுள்ளமையும், நிலைநாட்டவெனவிருந்த நினைவுக்கல்லும் காணாமல் ஆக்கப்பட்டுவிட்டமையும் எம் நெஞ்சை உலுக்கும் கொந்தளிக்க வைக்கும்நடவடிக்கைகளும்ஆகும்.

நேற்று முன்தினம் இரவோடிரவாய் முள்ளிவாய்க்கால் முற்றத்தைச் சுற்றி இராணுவம் குவிக்கப்பட்ட நிலையில் இக்கொடிய நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்நாகரிகமற்ற எம்இனத்தின் ஆன்மத்தையே அழிக்கும் செயலை அனைவரும் நாகரிகமுள்ள உலகமும் கண்டித்தே ஆகவேண்டும். இதற்கான பொறுப்பை அரசு ஏற்றுப் பதிலளிக்க வேண்டும்.

இந்நாட்டில் தமிழினப் பிரச்னை தீர்க்கப்படாமையினால் இடம்பெற்ற நீதிக்கான 70 ஆண்டுகள் போராட்டத்தின் உச்சநிலையில் இலட்சக்கணக்கான உயிர்கள், மனித குலம் அழிக்கப்பட்டமையை நினைவு கூரும் பண்பாடு, நாகரிகம், அந்த உறவுகளுக்கும் நீதிக்காய்ப் போராடும்திடசங்கற்பங்கொண்ட மக்களுக்கும் உள்ள உரிமையையும் அழிக்க எடுக்கும் இத்தகைய நடவடிக்கைகளை நாம் அனைவரும் எதிர்த்தேயாக வேண்டும்.

முள்ளிவாய்க்கால் மே-18 நினைவுகூரும் அதேவேளை கொரோனா வைரஸ்-19 தீவிரமடைந்துவரும் நிலையில் சுகாதார விதிமுறைகளை ஏற்று பழியஞ்சி அமைதி வழியில் மக்கள், உறவுகள் வாழும் இடங்களில் நினைவுகூருவதற்கே அறிவித்தல் கொடுக்க எண்ணியிருந்தோம். கிருத்துவ மத ஆயர்களும் அவ்வாறானதொரு ஆனால் காத்திரமான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர். எவ்வாறாயினும் இனவிடுதலைப் போரில் அழிக்கப்பட்ட எம்மினத்தின் உறவுகள் தம் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும் கண்ணீர் விட்டழுது ஆறுதல் பெறவும் உயிர் நீத்த உறவுகள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதற்கும் உள்ள மனிதகுல நாகரிகத்தை உரிமையை நாமுள்ளவரை நிலைநாட்டவும் திடசங்கற்பம் கொள்வோம்.

அரசு அதன் இராணுவம், பௌத்தர்களும் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் குருந்தூர் மலைப்பிரதேசத்தில் சைவ மக்கள் வழிபாட்டுத்தலத்தில் கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளையும் மீறி ஒன்று கூடி பௌத்த சிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளிலும், வழிபாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், இனவிடுதலைப் போரில்உயிர்களைப்பலிகொடுத்த உறவுகள் அந்த இன மக்கள் அவ்வுறவுகளை நினைவுகூரும் உரிமை பௌத்த சிங்கள அரசுகளினால் மறுக்கப்படுவது மட்டுமல்ல அந்த நினைவுகூரும் மையங்கள் நினைவிடங்களும் அழிக்கப்படுகின்றன.

நாம் இந்நாளில் தொடர்ந்தும் மனித குலத்தின் தமிழ் மக்களின் பண்பாடு, நாகரிகத்தை நிலைநாட்டுவோம் எனவும், அழிக்கப்பட்ட நினைவிடத்தை நினைவுச் சின்னங்களை மீளஅமைப்போம் எனவும், இனவிடுதலையை நிலைநாட்டுவோம் எனவும் திடசங்கற்பம் கொள்வோம் - என்றுள்ளது.

## பொலிஸாரின் சூட்டில் கொஸ்கொட தாரக பலி

கொழும்பு, மே. 14

பாதாள கோஷ்டி தலைவரான கொஸ்கொட தாரக என்றழைக்கப்படும் தாரக பெரேரா விஜேசேகர நேற்றுக் காலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு அதிகாரிகளினால் இவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று அதிகாலை மீரிகம, ரேந்த பொல பிரதேசத்துக்கு விசேட நடவடிக்கை ஒன்றிக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

இதன்போது கொஸ்கெட தாரக பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முற்பட்டுள்ளார். பதிலுக்கு பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலேயே அவர் படுகாயமுற்றார். இதனையடுத்து அவர் மீரிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த சம்பவத்தில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில், அவர் வத்துபிடிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் மரணம் தொடர்பாக விசேட விசாரணை ஒன்று மேல் மாகாண வடக்கு பிரதி பொலிஸ்மா அதிபரின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறவுள்ளது.

கொஸ்கெட தாரக கொஸ்கொட, மாத்தறை, மொரடுவை மற்றும் கொட்டாவை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற 7 கொலைகள் மற்றும் 21 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபராவார்.

## கிளிநொச்சியில் ஒரே குடும்பத்தில் ஐந்து பேருக்கு கொரோனா தொற்று

கிளிநொச்சி, மே. 14

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் வெளிமாவட்டம் ஒன்றின் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றார்.

பல்கலைக்கழகங்கள் மூடப்பட்ட நிலையில் வீடு திரும்பிய அவர் வீட்டிலேயே சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

அவருடன் சேர்த்து வீட்டாருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று காலை வெளியாகின.

குறித்த முடிவுகளின் அடிப்படையில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## வவுனியா சிகிச்சை மையத்தில் 155 கொரோனா தொற்றாளர்கள்

வவுனியா, மே. 14

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைத்தியசாலைக்கு 155 நோயாளர்கள் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

நாட்டில்கொரொனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் அவர்களிற்கு சிகிச்சை அளிப்பதற்காக கட்டில் வசதிகளை கொண்ட வைத்திய சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் வவுனியாவில் பயன்பாடற்ற நிலையில் காணப்பட்ட பொருளாதார மத்தியநிலையம் 200 படுக்கை வசதிகள்கொண்ட வைத்தியசாலையாக மாற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த வைத்தியசாலையில் 155 கொரோனா நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய கொரோனா சிகிச்சை விடுதிகள்



யாழ்ப்பாணம், மே.14

கொரோனா நோயாளிகளாக இனங்காணப்படுவோருக்கு சிகிச்சையளிக்க புதிய விடுதிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளன.

நாட்டில்தீவிரமாக பரவி வரும் கொரோனா தொற்று நிலைமையின் காரணமாக மாவட்டங்கள் தோறும் தொற்றுக்குள்ளாவோருக்கு சிகிச்சை வழங்கக்கூடியவாறான ஏற்பாடுகள் மாகாண சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை, அதி தீவிர சிகிச்சை, ஒட்சிசன் தேவைப்படுவோருக்கு சிகிச்சை வழங்க மற்றும் கர்ப்பிணிகளுக்கு தொற்று ஏற்படும் போது அவர்களுக்கு விசேட சிகிச்சை வழங்க இரண்டு விடுதிகள் கொரோனா சிகிச்சைக்கென தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

புதிதாகத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளவிடுதியை யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

## இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த 4 பேர் கைது!

யாழ்ப்பாணம், மே. 13

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வருகை தந்து யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வந்து தங்கியிருந்த நால்வர் பொது மக்கள்வழங்கிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தலுக்கு அமைய தனியான இடத்தில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குரிய பி.சி.ஆர் பரிசோதனைகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு ஈரோடு மாவட்டம் அரச்சலூர் முகாமில் வசித்து வந்த தாய், மகள், 2 பேரப்பிள்ளைகள் என 4 பேர் படகு மூலம் தாயகம் வந்து சேர்ந்துள்ளனர்.

பி. சகாயராணி (வயது 60), இவரது மகள் மேரி லவுரா (வயது 35), இவரது பிள்ளைகள் கௌரி யல்றிசாந்த்(வயது-9) டிலான் லியோநட் (வயது-7) ஆகியோரே 10ஆம் திகதி இரவு புறப்பட்டு, நேற்று முன்தினம் அதிகாலை யாழ்ப்பாணம் குருநகர் பகுதியை வந்தடைந்துள்ளனர் என்ற தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.


மேரி லவுராவின் கணவர் அருள் தீபன் பிரான்ஸில் உள்ளார். மேரிலவுரா ஏற்கனவே பிரான்ஸ் செல்வதற்கு சட்டவிரோதமாக கடவுச்சீட்டு தயார் செய்த முறைப்பாட்டில் இவருக்குப் பதிலாக இவரது கணவரின் தம்பி நிஷாந்தன் இன்னும் கோயம்புத்தூர் மத்திய சிறையில் உள்ளார்.

இந்த நிலைமையிலேயே இவர்கள் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈழநாடு



# தடுப்பூசி அறிவியல்: யாருடைய சொத்து?




மு.இராமனாதன்

டிசெம்பர் 2019 இல் கொரோனா தலைகாட்ட ஆரம்பித்தது. ஜனவரி 2020 இல் அதன் மரபுக் கட்டமைப்பு அறியப்பட்டது. அடுத்த 10 மாதங்களில் தடுப்பூசிகள் தயாராகிவிட்டன. இம்மாதிரி உயிர் காக்கும் மருந்துகள் மக்களைச் சென்றடைவதில் ஒரு சிக்கல் இருந்துவருகிறது. மருந்து நிறுவனங்கள் புதிய மருந்துகளைக் கண்டறியப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்கின்றன.

ஆய்வு வெற்றியடை யும்போது நிறுவனங்கள் மருந்தின் கலவையையும் செய்முறையையும் பகிர்ந்துகொள்வதில்லை. எனவே, மருந்துகள் அதீத விலைக்கு விற்கப்படுவதைத் தடுக்க முடிவதில்லை. 1995-ல் உலக வணிக அமைப்பு உருவாக்கிய ஒப்பந்தம் இவர்களின் நலனைக் காக்கிறது. அறிவுசார் சொத்துரிமையில் வணிகம் தொடர் பான சட்டங்கள் (டிரிப்ஸ்) என்பது அந்த ஒப்பந்தத்தின் பெயர்.

டிரிப்ஸ் சட்டத்துக்கு ஆதரவாகச் சொல்லப்படும் வாதம், சிலர் பாடுபட்டு உருவாக்கிய அறிவுசார் சொத்து பகிர்ந்துகொள்ளப்பட்டால், நிறுவனங்களுக்குத் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆர்வம் இராது என்பதாகும். சில பொருளியல் அறிஞர்கள் இதற்கு ஒரு மாற்றை முன்வைக்கின்றனர். மனித குலத்துக்கு அவசியமான மருத்துவக் கண்டுபிடிப்புகளுக்குத் தக்க பரிசும் பணமும் பாராட்டும் வழங்கி அந்த அறிவைப் பொதுவுடைமை ஆக்கிவிட வேண்டும். அப்போது எல்லா நிறுவனங்களாலும் அந்த மருந்தைத் தயாரிக்க இயலும். ஆனால், அப்படி எதுவும் நடந்துவிடவில்லை.

இந்த முறை தடுப்பூசி ஆய்வுகள் தொடங்கியதிலிருந்தே அரசுப் பணத்தைப் பல நாடுகள் தாராளமாகச் செலவு செய்தன. இதுவரை உலக அளவில் ரூ.17 லட்சம் கோடி பொதுப் பணம் செலவிடப்பட்டிருப்பதாக ஒரு மதிப்பீடு தெரிவிக்கிறது. ஆனாலும், இந்தத் தடுப்பூசிகளின் உரிமம் நிறுவனங்களின் கைகளில்தான் இருக்கிறது. எப்படி?

மொடர்னா என்கிற தடுப்பூசியை உருவாக்குவதில் அந்த நிறுவனத்துடன் இணைந்து செயல்பட்ட நை-எய்ட், பார்டா ஆகிய ஆய்வு நிறுவனங்கள் அமெரிக்க அரசின் நிறுவனங்கள். எல்லாச் செலவையும் அரசே ஏற்றுக்கொண்டது. ஆனால், உரிமம் மாடர்னாவிடமே இருக்கிறது. பைசர் அமெரிக்க நிறுவனம். அதனுடன் இணைந்து பணியாற்றிய பயோ-என்-டெக் என்கிற ஜெர்மானிய நிறுவனம், சீனாவிடமிருந்தும் ஐரோப்பிய நாடுகளிடமிருந்தும் நிதியுதவி பெற்றது. எனினும் உரிமம் பைசரிடமே இருக்கிறது.

ரஷ்யத் தடுப்பூசியான ஸ்புட்னிக் அரசு ஆதரவில்தான் உருவாகியது. இப்போது இந்தியாவில் பயன்படுத்தப்படும் இரண்டு தடுப்பூசிகளில் ஒன்று கோவிஷீல்ட். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ட்ரஸெனகா என்கிற பிரிட்டிஷ் நிறுவனமும் இணைந்து உருவாக்கியது. இந்த உருவாக்கத்தில் 97% செலவினம் அரசால் ஏற்கப்பட்டது. ஆனால், அதன் உரிமம் அஸ்ட்ரஸெனகாவிடம்தான் இருக்கிறது. தனது உரிமத்தை அது பல அயல்நாட்டு நிறுவனங்களுக்கு விற்றது. அப்படித்தான் புனேயில் உள்ள இந்திய நிறுவனமான சீரம் இன்ஸ்டிட்யூட், கோவிஷீல்டின் உரிமத்தைப் பெற்றது. சீரம் தனது மருந்தை இந்திய அரசுக்கு ரூ.150இற்கு விற்றுவருகிறது. அதை 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்திய அரசு இலவசமாக வழங்கிவருகிறது.

> “ கொரோனா பெருந்தொற்றை எதிர்கொள்ள மக்களின் பணத்தில் அறிவியலர்கள் தடுப்பூசிகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால், அவை வியாபாரிகளின் கைகளில் சிக்கிக்கொண்டிருக்கின்றன. இந்த மருந்துகளால் மக்கள் பயனுற வேண்டும். அதை அரசுகளால் செய்ய முடியும். ”

ஏப்ரல் 19 அன்று இந்திய அரசு ஒரு கொள்கை முடிவை அறிவித்தது. அதன்படி, 18 முதல் 44 வயதினருக்கான மருந்தை மாநிலங்களும் தனியார் மருத்துவமனைகளும் நேரடியாகக் கொள்முதல் செய்துகொள்ள வேண்டும். இப்போது சீரம் நிறுவனம் மாநிலங்களுக்கு ரூ. 300, தனியாருக்கு ரூ.600 என்று விலை வைத்திருக்கிறது. பிரிட்டிஷ் அரசின் முதலீட்டில், ஒரு பல்கலைக்கழகத்தில் உருவான தொழில்நுட்பம், இன்று இந்தியச் சந்தையில் ஒரு முதலாளிக்கு இலாபம் ஈட்டித்தருகிறது.



இந்தியாவில் பயன்பாட்டில் இருக்கும் இன்னொரு தடுப்பூசி கோவேக்சின். இதன் தயாரிப்பாளர் பாரத் பயோடெக் எனும் ஹைதராபாத் நிறுவனம். இந்த மருந்தின் உருவாக்கத்தில் இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்துக்கு (ஐ.சி.எம்.ஆர்) கணிசமான பங்கு இருக்கிறது. இந்திய அரசின் நல்கையும் இருக்கிறது. ஆனால், மேலை நாடுகளைப் போல அரசின் பங்கு எவ்வளவு என்பது பொதுத்தளத்தில் அறியக் கூடவில்லை. இந்த நிறுவனம், ஏப்ரல் 19 இற்குப் பிறகு மாநிலங்களுக்கு ரூ.400, தனியாருக்கு ரூ.1,200 என்று புதிய விலைப்பட்டியலை அறிவித்திருக்கிறது.

கூடுதல் விலையானாலும் பரவாயில்லை, அவற்றை வாங்கி மக்களுக்கு இலவசமாகச் செலுத்துவோம் என்று தமிழகம், கேரளம், மஹாராஷ்டிரம் முதலான வளர்ந்த மாநிலங்கள் அறிவித்திருக்கின்றன. ஆனால், சந்தையில் மருந்து இல்லை. இந்திய அரசு இரண்டு உள்நாட்டு நிறுவனங்களுக்கும் ரூ.4,500 கோடி வழங்கப்போவதாக அறிவித்திருக்கிறது. அதைப் பயன்படுத்தி நிறுவனங்கள் உற்பத்தியை அதிகரிக்கும். ஆனால், அவை சந்தைக்கு வரத் தாமதமாகும். போதுமான அளவிலும் இருக்காது. மேலும், எந்த மாநிலங்களுக்கு வழங்குவது என்பதை நிறுவனங்களே முடிவு செய்யுமா என்பதும் தெரியவில்லை.


இந்தச் சூழலை எப்படி நேரிடுவது? பல வல்லுநர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கிவருகின்றனர். இன்றளவும் பிள்ளைகளுக்கு அம்மை, காசநோய், போலியோ, நிமோனியா, நாய்க்கடி, மஞ்சள் காமாலை முதலிய நோய்களுக்கு எதிரான தடுப்பூசி மருந்துகளை இந்தியாவில் மத்திய அரசுதான் மொத்தமாகக் கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு வழங்குகிறது. அதைப் போலவே இந்த கொரோனா தடுப்பூசி மருந்தையும் மத்திய அரசே நேரடியாக வாங்கி, மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டும். ஏனெனில், ஒன்றிய அரசிடம்தான் நிதி, நிபுணத்துவம், அதிகாரம், அயலுறவு எல்லாம் இருக்கிறது.

இதைத் தாண்டி, மாநில அரசுகள் தடுப்பூசியை வாங்க விரும்பினால் அதற்கான சுதந்திரமும் அவற்றுக்கு இருக்க வேண்டும். மேலும், அரசு கோவிஷீல்டு முதலான மேலை நாட்டு மருந்துகளின் காப்புரிமையை வாங்கி, நமது பொதுத் துறை, தனியார் துறை மருந்து நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும். கோவேக்சினின் காப்புரிமையையும் கையகப்படுத்தி இன்னும் பல உள்நாட்டு நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

இந்தப் பெருந்தொற்றை எதிர்கொள்ள மக்களின் பணத்தில் அறிவியலர்கள் தடுப்பூசிகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால், அவை வியாபாரிகளின் கைகளில் சிக்கிக்கொண்டிருக்கின்றன. இந்த மருந்துகளால் மக்கள் பயனுற வேண்டும். அதை அரசுகளால் செய்ய முடியும்.

- தி இந்து -

காசி விஸ்வநாதன்



# சீனாவின் வல்லரசு கனவும் மாலைதீவு கடலில் வீழ்ந்த விண்கலமும்

> விண்கலம் ஒன்று செலுத்தப்படுகிறது என்றால், ஒவ்வொரு கட்டத்திலும் அதன் செயல்பாடு முடிந்தபின் அதன் பாகங்கள் அதிலிருந்து பிரிந்து கீழே விழும். பெரும்பாலும் கடலில் விழும் வண்ணம் திட்டமிட்டிருப்பார்கள். ஆனால், இந்த விண்கலத்தைப் பொறுத்தவரையில் சீனா அதைச் செய்யவில்லை. எப்படியும் கீழே விழும் என்று தெரிந்தே சீனா இதை நடக்கவிட்டிருக்கிறது என்பதுதான் நாசா போன்ற அமைப்புகளின் குற்றச்சாட்டு.

விண்வெளியில் கட்டுப்பாட்டை இழந்த சீனாவின் விண்கலத்தின் பெரும் பாகம் இந்து சமுத்திரத்தில் மாலைதீவுகள் அருகே கடலில் வீழ்ந்தது. பீஜிங் நேரப்படி கடந்த ஞாயிறு காலை 10.15 மணியளவில் விண்கலத்தின் எரிந்த பாகங்கள் கடலில் வீழ்ந்தன என்பதை சீன அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த விண்கலத்தின் பாரிய அந்தப் பாகம் ஒன்று நியூஸிலாந்து, இந்தோனேசியா, அல்லது மேற்கு ஐரோப்பா போன்ற ஏதேனும் ஒரு பகுதியில் விழலாம் என்று கடந்த சில தினங்களாக எதிர்பார்க் கப்பட்டது. விண்கலப் பாகம் பூமியில் வீழ்வதற்கு முன்னரே அதனை சுட்டு வீழ்த்துவது உட்படப் பல வழி முறைகள் கைவசம் உள்ள போதிலும் அவ்வாறு செய்யத் தீர்மானிக்கப்படவில்லை என்று அமெரிக்காவின் பென்ரகன் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

பூமியில் சுமார் 70 வீதம் கடற்பகுதி என்பதால் அது பெரும்பாலும் கடலில் வீழ்வதற்கே வாய்ப்புகள் அதிகம் என்று விண்வெளி அறிவியலாளர்கள் கூறியிருந்தனர். ஆயினும் வாழ்விடங்களில் வீழ்ந்து விடக்கூடும் என்ற அச்சம் உலக மக்கள் மத்தியில் காணப்பட்டது. “Long March 5B rocket” என்ற பெயர் கொண்ட சீனாவின் விண்கலம் கடந்த மாதம் விண்வெளிக்கு செலுத்தப்பட்டது.

சீனா புதிதாக அமைத்துவருகின்ற விண் வெளி நிலையத்துக்கான ஒரு முக்கிய பாகத்தை எடுத்துச் சென்ற அந்த விண்கலம் கட்டுப்பாட்டை இழந்தது. சுமார் 18 தொன் எடை கொண்ட அதன் பெரும் பாகம் ஒன்று விலகி பூமியை நோக்கி வரத் தொடங்கியது. ஆனால் பூமியின் வளிமண்டலத்தில் பிரவேசிக் கும் போதே அது வெப்பத்தில் எரிந்து பல துகள்களாகப் பிரிந்து போகும் வாய்ப்புக் காணப்பட்டது.

விண்கலங்கள் பூமியில் வீழ்கின்ற இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. ஓராண்டுக்கு முன்பு சீனாவின் மற்றொரு விண்கலப் பாகம் ஆபிரிக்காவில் ஐவரி கோஸ்ட்(Ivory Coast) நாட்டின் கிராமம் ஒன்றில் வீழ்ந்து சேதங்களை ஏற்படுத்தி இருந்தது. சீனா தனது விண்கலங்கள் குறித்துப் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டிவருகிறது.

நாடுகள் ஏட்டிக்குப் போட்டியாக விண் வெளிக்குக் கலங்களையும் ரொக்கெட் டுகளையும் அனுப்பி வருவதால் அண்டவெளி ஆபத்தான பகுதியாக மாறிவருகிறது. பழுதடைந்த, அல்லது விபத்துக்குள்ளான கலங்களின் சிதைவுகள் சுற்றுப் பாதையில் கைவிடப் படுவதால் அங்கு அவை பெரும் கழிவுகளாகச் சேர்ந்து வருகின்றன. அவற்றில் சில பூமியில் வீழும் ஆபத்தும் ஏற்படுகின்றது.

அமெரிக்கா, ரஷ்யா வரிசையில் உலகின் முன்னணி வல்லரசாகும் வேட்கையுடன் பல வருடங்களாகத் தீவிரமாக உழைத்துக்கொண்டிருக்கும் நாடு சீனா. ‘விரைவில் பொருளாதாரத்தில் உலகின் முதலாவது நாடாகச் சீனா உயரும்’ எனக் கணக்கிடுகின்றனர் வல்லுநர்கள். வல்லரசாக வேண்டுமென்றால் பொருளாதாரம், விளையாட்டையும் தாண்டி இன்னொரு முக்கிய விஷயத்திலும் சாதிக்க வேண்டும் என்பது எழுதப்படாத சட்டம்.

அது, விண்வெளி ஆராய்ச்சி. பனிப்போரின்போது அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்தக் களத்தில்தான் முட்டி மோதிக்கொண்டன. அந்தச் சமயத்தில் விண்வெளி ஆராய்ச்சியில் பல மைல்கல்கள் எட்டப்பட்டன. மனிதன் விண்வெளிக்குப் பாய்ந்தான், நிலவில் கால்தடம் பதித்தான். இந்த விண்வெளிப் போட்டியில் மற்ற நாடுகளை முந்திக்கொண்டு முதல் இடத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது சீனா.

செவ்வாய்க்கு விண்கலம் அனுப்பியது, எந்த ஒரு நாடும் இதுவரை தடம் பதிக்காத நிலவின் மற்றொரு புறத்தில் விண்கலத்தைத் தரையிறக்கியது, நிலவிலிருந்து மாதிரிகளைப் பூமிக்கு எடுத்துவந்தது எனச் சமீப காலத்தில் பல சாதனைகளைப் படைத்திருக் கிறது சீனா. இன்னும் பல திட்டங்களையும் கைவசம் வைத்திருக்கிறது.

அதில் முக்கியத் திட்டம் தியான்காங் விண்வெளி நிலையம் (Tiangong Space Station). சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு (International Space Station) மாற்றாகச் சீனா முன்வைக்கும் அதிநவீன விண்வெளி நிலையம் இது. அமெரிக்காவின் நாசா, ரஷ்யாவின் ராஸ்காஸ்மாஸ் மற்றும் சில விண்வெளி ஆராய்ச்சி அமைப்புகள் சேர்ந்து நிறுவிய சர்வதேச விண்வெளி நிலையம் தொடர்ந்து 20 வருடங்களுக்கும் மேலாக மனிதர்களை விண்வெளியில் வைத்திருக்கிறது. ஆனால், இதில் சீன விண்வெளி வீரர்களை அனுமதிக்கவில்லை அமெரிக்கா. அதனால்தான் கிட்டத்தட்ட அதே போன்றதொரு விண்வெளி நிலையம் அமைப்பதில் தீவிரமாக இருக்கிறது சீனா.

‘தியான்காங்’ என்ற சீன வார்த்தைக்கு ‘சொர்க்க பூமி’ என்று அர்த்தம். 2022 இல் இயங்கவுள்ள இந்த விண்வெளி நிலையத்தின் ஒரு பெரும்பகுதியை (Tianhe Module) கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி விண்ணுக்கு அனுப்பியது சீனா. இதை எடுத்துச் சென்ற லாங் மார்ச் 5பி ரொக்கெட்டின் பாகங்கள் கட்டுப்பாடின்றி எப்போது வேண்டுமானாலும் பூமியில் மோதலாம் எனத் தகவல் வெளிவர, அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சுமார் 23 தொன் எடையுள்ள, கிட்டத்தட்ட 10மாடி உயரமுடைய பாகம் ஒன்று அதிவேகத்தில் பூமியில் விழப் போகிறது என்றால் யாருக்குத்தான் திக்கென இருக்காது!

பொதுவாக விண்ணில் ஒரு விண்கலம் செலுத்தப்படுகிறது என்றால், ஒவ்வொரு கட்டத்திலும் அதன் செயல்பாடு முடிந்தபின் அதன் பாகங்கள் விண்கலத்திலிருந்து பிரிந்து கீழே விழும். பெரும்பாலும் கடலில் விழும் வண்ணம் திட்டமிட்டிருப்பார்கள். ஆனால், “இந்த விண்கலத்தைப் பொறுத்தவரையில் சீனா அதைச் செய்யவில்லை. எப்படியும் கீழே விழும் என்று தெரிந்தே சீனா இதை நடக்கவிட்டிருக்கிறது” என்பதுதான் நாசா போன்ற அமைப்புகளின் குற்றச்சாட்டு.

சீனாவோ, “இதைத் தேவையில்லாமல் மேற்கத்திய நாடுகள் பெரிதுபடுத்துகின்றன. பூமியில் 70% கடல்களால் நிரம்பியது. எப்படியும் இது கடலில் விழும். அல்லது தரையை அடைவதற்குள் எரிந்து சாம்பலாகிவிடும்” என விளக்கம் கொடுத்தது. சீனா சொன்னபடியே மாலைதீவு அருகே இந்தியப் பெருங்கடலில் விழுந்தது இந்த விண்கலத்தின் பாகம். ஆனால், “விண்வெளிக்கு அனுப்பும் பொருள்கள் மீண்டும் பூமிக்குத் திரும்பி மக்களுக்கும் மக்கள் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்காமல் இருப்பதை உறுதிசெய்யவேண்டும். பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை ஆகியவை இதில் அவசியம். அனைத்து நாடுகளும் பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள்” என்று கண்டித்தார் நாசாவின் தலைமை நிர்வாக அதிகாரி பில் நெல்சன்.

இன்று தொழில்நுட்பங்கள் எவ்வளவோ வளர்ந்துவிட்டன. ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்கலங்களின் பாகங்களை பத்திரமாகத் தரையிறக்கி, அவற்றை மீண்டும் பயன்படுத்தும் முயற்சியில் இருக்கிறது. முதல்கட்ட சோதனையில் வெற்றியும் கண்டுள்ளது. அந்த அளவு முயற்சிகள் இல்லையென்றாலும் பாதுகாப்பான இடங்களில் பாகங்கள் விழுவதையாவது உறுதிசெய்ய வேண்டும் சீனா.

சீனாவின் எல்லைகளுக்கு உட்பட்ட பிரச்னை என்றால் யாரும் கேள்விகேட்கப்போவதில்லை. ஆனால், இது யாரை வேண்டுமானாலும் பாதிக்கும் ஒரு சிக்கல். மார்ச் மாதம் ஸ்பேஸ் எக்ஸ் விண்கலத்தின் ஒரு பகுதி இதே போன்று அமெரிக்க விவசாய நிலங்களில் விழுந்தது. ஆனால், அது ஒரு விபத்து. எதிர்பார்த்த வண்ணம் அந்த விண்கலம் செயல்படவில்லை. சீனா ‘இதுதான் நடக்கும்’ என்று தெரிந்தே விண்கலங்களை ஏவுகிறது என்பதுதான் பலரும் கேள்வியெழுப்ப முக்கிய காரணம்.

கடந்த வருடம் இதே ரக சீன விண்கலம் ஒன்றின் பாகங்கள் ஐவரி கோஸ்ட் நாட்டின் கடலோரப் பகுதியில் விழுந்து சில குடியிருப்புகளைச் சேதப்படுத்தியது. நல்லவேளையாக யாரும் காயமடையவில்லை. 2022-க்குள் இன்னும் இதுபோன்ற பத்து விண்கலங்களை ஏவத் திட்டமிட்டிருக்கிறது சீனா. எதிரி நாடுகள் உஷாராக உள்ளன.

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 3
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

### இல -2 வினாத்தாள் - II விடைகள்

14) காலை வணக்கம் — 1 புள்ளிகள்
15) அய்யா கிரி பொன்ன — 1 புள்ளிகள்
16) * முதல் மூன்று வாக்கியங்களுக்கும் 2 புள்ளிகள் வீதம் 6 புள்ளிகள் வழங்கப்படும்.
 * எழுவாய்,பயனிலை தொடர்பு எடுத்துக்கூட்டல் பிழையிருப்பின் புள்ளி வழங்கப்பட மாட்டாது.
 * ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துப்பிழை மட்டுமெனின் 1 புள்ளி வழங்குக. அதற்கு மேல் எனின் புள்ளி வழங்க வேண்டாம்.
 1. இலவசப் பாடநூலுக்கு புதிதாக உறையிட்டு எனது பெயரை உறையின் மீது எழுதுவேன்.
 2. புத்தகப்பக்கங்கள் கிழித்தல் , மடித்தல், எழுதுதல் போன்றவற்றைத் தவிர்த்து அதனைப் பாதுகாப்பேன்.
 3. புத்தகத்தை அழுக்கான இடத்தில் வைக்காது உரிய இடத்தில் ஒழுங்காக அடுக்கி வைப்பேன். — 6 புள்ளிகள்

போன்ற வாக்கியங்களாக இருக்கும் பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்கலாம்.

17) பத்தொன்பதாயிரத்து எண்ணூற்றுப் பதின்மூன்று
18) 24 , 27
19) i. 4 , 4, 6
 ii. 5, 5, 8
20) 0.3
21) i. 10:15 மணித்தியாலம்
 ii. பி.ப 2.50 / 14:50 மணித்தியாலங்கள்
22) i. 10
 ii. 10
23) 80
24) 8l 225ml / 8225ml
25) 18, 36, 42
26) i. 1/3 / 8/24
 ii. 3
27) i. 375 சதுர சென்ரிமீற்றர்
 ii. 10cm
28) 634
29) 3m 80cm
30) i. 4 கட்டடத்திற்கு நிழற்றுக.
 ii. 40


14x2 = 28 புள்ளிகள்


| | | | |
|---|---|---|---|
| 31. 2 | 39. 1 | 47. 1 | 55. 2 |
| 32. 3 | 40. 1 | 48. 1 | 56. 3 |
| 33. 3 | 41. 3 | 49. 1 | 57. 2 |
| 34. 4 | 42. 4 | 50. 1 | 58. 3 |
| 35. 3 | 43. 3 | 51. 2 | 59. 1 |
| 36. 3 | 44. 2 | 52. 4 | 60. 2 |
| 37. 1 | 45. 4 | 53. 4 | |
| 38. 3 | 46. 3 | 54. 4 | |

31x1 = 30 புள்ளிகள்


* முழுவிடைத்தாளையும் கவனத்திற்கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும், சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் 02 புள்ளிகள் வழங்குக.


* பின்வருவனவற்றுள் இரண்டு உருவங்கள் ஒத்த தன்மையுடையவை. ஒன்று மட்டும் வேறுபட்ட தன்மையுடையது. வேறுபட்ட தன்மையுடைய விடையின் கீழ் கோடிடுக.

01.

1 2 3

02.

1 2 3

* மிகக் குறைந்த தொடர்புள்ள உருச்சோடிகளைத் தெரிவு செய்க.

03.

1 2 3

04.

1 2 3


05. நான் ஓர் ஆணாவேன். முரளியின் மகன் எனது மகளின் தந்தை எனின் முரளி ஆனவர் எனக்கு
 01. சகோதரன் 02. சிற்றப்பா 03. தந்தை

06. 24 ÷ 8 x 7 தரப்பட்டுள்ள கணிதச் செய்கையில் பெறத்தக்க விடைக்குச் சமனான விடையாக வரக்கூடிய கணிதச் செய்கையைத் தெரிவு செய்க.
 01. 14 ÷ 2 x 3 02. 3 x 5 ÷ 3 03. 21 ÷ 3 x 2

07. 600 இன் அரைவாசியின் 1/4 பங்குடன் 25 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?
 01. 150 02. 200 03. 100

08. கடலில் நிதமும் இருப்பவை
 01. அலையும் மீனும் 02. மீன்களும் நீரும் 03. நீரும் உப்புச் சுவையும்

* 9 ஆம் வினாவுக்கு பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.

09.



01. 500ml 02. 400ml 03. 800ml

# நினைவுச்சின்னங்களை இடித்தழிப்பதன் மூலம் தமிழர்களின் உணர்வுகளை அழிக்கவே முடியாது

## கூட்டமைப்பு எம்.பி. சாணக்கியன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 14

தமிழர்களுடைய உணர்வுகளை நினைவுச் சின்னங்களை இடித்து அழிப்பதன் ஊடாக அழிக்க முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த பொதுத் தூபி இனந்தெரியாத நபர்களினால் நேற்றுமுன்தினம் இரவு சேதமாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இது குறித்து நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“முள்ளிவாய்க்காலிலே கொல்லப்பட்ட உறவுகளின் நினைவாக அங்கே அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தின் நடவடிக்கை என்று நாங்கள் சந்தேகப்படுகின்றோம்.

இந்த அரசானது தொடர்ந்து தமிழர்களுடைய வரலாறுகளை, தமிழர்களுக்கு நினைவுகூரும் வாய்ப்பைக்கூட இல்லாமலாக்கும் ஓர் அரசாகும்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய அரசு ஒன்று வந்ததன் பின்னர் உயிரிழந்த உறவுகளைக் கூட நினைவேந்த அனுமதி மறுக்கப்படுகின்றது. நீதிமன்ற உத்தரவு ஊடாகத் தடையும் விதிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு



முன்னர் யாழ். பல்கலைக்கழகத்தில்கூட இவ்வாறாக ஒரு சம்பவம் நடைபெற்றது. ஆனால், அங்கு இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியைப் பல்கலைக்கழக உபவேந்தரே மீண்டும் கட்டி முடித்திருக்கின்றார்.

உண்மையில் இவ்வாறான நினைவுச் சின்னங்களை இடித்து அழிப்பதன் ஊடாகத் தமிழர்களுடைய உணர்வுகளை அழிக்க முடியாது. நீங்கள் இடிக்கும் ஒவ்வொரு நினைவுச் சின்னமும் தமிழர்களுடைய மனங்களில் ஒரு புதிய உணர்வை ஏற்படுத்தும் ஒரு சம்பவமாகத்தான் நான் பார்க்கின்றேன்.

நீங்கள் எவ்வாறுதான் எங்களுடைய உணர்வுகளைத் தடுக்க முயற்சித்தாலும் நாங்கள் நடந்த எந்த விடயத்தையும் மறக்க மாட்டோம். இந்த நாட்டில் தமிழர்களுக்கு எதிராக நடந்தேறிய எந்த அநீதியையும் நாங்கள் மறக்க மாட்டோம்.

விசேடமாக 2009 இல் இந்த வாரம் எத்தனையோ ஆயிரக் கணக்கான உறவுகளை நாங்கள் இழந்திருந்தோம். அந்த உறவுகள் உயிரிழந்த திகதியோ, உயிரிழந்த இடமோ எங்களுக்குத் தெரியாத நிலையிலே கூட அனைவரையும் நினைவுகூர்கின்ற ஒரு இடமாக அந்த நினைவுச் சின்னத்தை நாங்கள் கடந்த வருடங்களில் பயன்படுத்தியிருந்தோம்.

நீங்கள் தமிழர்களுடைய உணர்வுகளை அழிப்பதற்கு வேறு புதிய வழிகளைத் தேட வேண்டும். ஏனென்றால் எங்களுடைய உணர்வுகளை உங்களால் அழிக்க முடியாது.

இந்தச் சம்பவத்தை மிக வன்மையாக நான் கண்டிக்கின்றேன். அதைப்போல்தான் அரசுடன் இணைந்திருக்கின்ற எங்களுடைய தமிழ் பிரதிநிதிகளும் கூட இது தொடர்பாக உங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும். இன்று நீங்கள் அரசுடன் இருந்தாலும் உங்களைத் தெரிவு செய்தது தமிழ் மக்கள்தான். உங்களைத் தெரிவு செய்த மக்களுடைய உறவுகளும் கூட அன்று இறுதிப் போரில் இந்த மாதத்திலே - இந்த வாரத்திலேயே நிச்சயமாக உயிரிழந்திருப்பார்கள். தமிழர்களின் நினைவுத் தூபிகளை இடிக்காமல் பாதுகாக்கின்ற முழுப்பொறுப்பு உங்களுக்கும் உண்டு.

இந்த அரசு தன்னுடைய இறுதி ஊர்வலத்திலே பயணிக்க ஆரம்பித்து விட்டது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகின்றேன். பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஒரு வருடத்துக்குள்ளேயே தன்னுடைய இறுதி ஊர்வலத்திலே இந்த அரசு பயணிக்க ஆரம்பித்துவிட்டது” - என்றுள்ளது. (இ)

# தாழமுக்கம் காரணமாக சில இடங்களில் ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி இல்லை

கொழும்பு, மே 14

சில பகுதிகளில் ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்வதற்கான அனுமதி நேற்று முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது எனக் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மயிலிட்டி, பேருவளை, திக்கோவிட்ட, பிட்டபன, கல்பிட்டி ஆகிய மீன்பிடி துறைமுகங்களிலிருந்து ஆழ்கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கான அனுமதியே நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரபிக் கடலின் வடக்கு திசையில் ஏற்பட்டுள்ள சீரற்ற தாழமுக்கம் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் தென்மேற்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் மழையுடனான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது பலத்த காற்று வீசக் கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தபால் சேவை நேரத்தில் மாற்றம்

கொழும்பு, மே 14

நாட்டிலுள்ள அனைத்து தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 வரை மாத்திரமே திறக்கப்பட்டிருக்கும் என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன அறிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு சில பிரதேசங்களில் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை தபாலை விநியோகிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் தபால் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தபால்மா அதிபர் மேலும் கூறியுள்ளார். (இ)

# வடக்கில் தொற்றுக்குள்ளாகி 3 கர்ப்பவதிகள் சிகிச்சையில்

யாழ்ப்பாணம், மே 14

நாடு முழுவதும் 130 கர்ப்பவதி பெண்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர். வடக்கு மாகாணத்தில் தற்போது 3 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இதுவரையில் கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பில் பொதுவான விவரங்களே சேகரிக்கப்பட்டு வந்தன. இன்றிலிருந்து தொற்றுக்குள்ளாகும் கர்ப்பிணிப் பெண்கள் தொடர்பான விவரங்கள் தனியாக வடக்கு மாகாண சுகாதாரத் திணைக் களத்தால் சேகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 448 பேர் கைது

கொழும்பு, மே 14

முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 448 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதனடிப்படையில், கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதி வரை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 8 ஆயிரத்து 747 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் விசேட சுற்றிவளைப்புகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (இ)

# கடந்த 8 நாட்களில் இலங்கையில் 148 பேர் கொரோனாவால் மரணம்!

கொழும்பு, மே. 14

மே 5-ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரையான 8 நாட்களில் மட்டும் இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட 148 பேர் உயிரிழந்தனர். மே-5 ஆம் திகதி 14 பேர், 6-ஆம் திகதி - 11 பேர், 7-ஆம் திகதி -19 பேர், 8-ஆம் திகதி -22 பேர் 9-ஆம் திகதி 15 பேர் உயிரிழந்தனர். மே 10-ஆம் திகதி இலங்கையில் ஒரு நாள் அதி கூடிய அளவாக 26 கொரோனா உயிரிழப்புக்கள் அறிவிக்கப்பட்டன. மே-11 ஆம் திகதி 23 பேர் கொரோனாவால் உயிரிழந்தனர். அத்துடன், நேற்று 18 பேர் கொரோனாவால் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் 8 நாட்களில் மட்டும் 148 பேர் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர். இவற்றுடன் நாட்டில் பதிவான மொத்த கொரோனா மரணங்கள் 868 ஆக அதிகரித்துள்ளன.

நாட்டில் தினசரி தொற்று நோயாளர்களும் சராசரி 2,500 என்ற அடிப்படையில் நாட்டில் பதிவாகி வருகின்றனர். அத்துடன், மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவுகள், தனிமைப்படுத்தல் விடுதிகள், சிகிச்சை மையங்கள் முற்றாக நிரம்பியுள்ளன. இதனால் அடுத்து வரும் வாரங்களில் கொரோனா மரணங்கள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடி கட்டுப்பாடின்றி தற்போதைய நிலையில் தொடருமானால் ஜூன் மாதமளவில் தினசரி உயிரிழப்புக்கள் 264 வரை அதிகரிக்கலாம் என வாஷிங்டன் பல்கலை கழகத்தை சேர்ந்த சுயாதீன ஆராய்ச்சி அமைப்பான ஐ.எச்.எம்.மி. தனது உத்தேச கணிப்பீட்டில் தெரிவித்துள்ளது. அத்துடன், இதே நிலை தொடர்ந்தால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் 20,000 உயிரிழப்புகள் ஏற்படக் கூடுமெனவும் அதன் உத்தேச கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.




கடந்த 25.04.2020 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப குலவிளக்கு
அமரர் நாகலிங்கம் இரத்தினம்
அவர்களின் ஓராண்டு நினைவு தின நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நேற்று 13.05.2021 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்றது.

அராலி தெற்கு, காளிகோவிலடி,
வட்டுக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்.
077 555 8485

ஈழநாடு





# கொரோனாவை குறைத்ததில் தடுப்பூசியின் பங்கு பெரியது!

## பிரிட்டன் சுகாதாரத்துறை

லண்டன், மே 14

கொரோனா தொற்றைக் குறைத்ததில் தடுப்பூசிகள் மிகப் பெரிய பங்கு வகித்துள்ளன என்று இங்கிலாந்து சுகாதார துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இதுகுறித்து இங்கிலாந்து சுகாதாரத்துறை அதிகாரிகள் தரப்பில், “நாடு முழுவதும் கொரோனா தொற்று நம்பமுடியாத அளவு குறைந்துள்ளது. மார்ச் மாதத்திலிருந்த கொரோனா தொற்று தற்போது பாதியாகக் குறைந்துள்ளது.

தொற்று குறைந்தத்தில் தடுப்பூசிகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. நாம் சரியான பாதையில் சென்று கொண்டு இருக்கிறோம். இருப்பினும் திரிபடைந்த கொரோனா வைரஸுக்கு எதிராக நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் ” என்று கூறப்பட்டுள்ளது.

பிரிட்டனில் கொரோனா தடுப்பு மருந்தை வேகமாகச் செலுத்தியமையால், அங்கு கொரோனா தொற்று பெருமளவு குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக 2,000இற்கும் குறைவானவர்களே தினசரி கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனைத் தொடர்ந்து பிரிட்டன் அரசு பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொற்றிலிருந்து குணமடைந்தோரை தாக்குகிறது கறுப்பு பூஞ்சை நோய்!

புதுடில்லி, மே 14



இந்தியா முழுவதும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாவது அலை மக்களைக் கடுமையாகப் பாதித்து வருகிறது. இந்தநிலையில், கொரோனா தொற்றில் இருந்து குணமான, குணமாகும் நோயாளிகளுக்கு, ‘மியூகோர்மை கோசிஸ்’ என அழைக்கப்படுகிற கறுப்பு பூஞ்சை நோய் தாக்குவதை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர். இது ஓர் அரிதான மற்றொரு தொற்று நோய் ஆகும்.

பொதுவாக மண், தாவரங்கள், அழுகும் பழங்கள் மற்றும் காய்கறிகளில் காணப்படுகிற ஒருவகை பூஞ்சையால் உருவாவதாக சொல்லப் படுகிறது. இந்த நோய் சைனஸ்கள், மூளை மற்றும் நுரையீரலை தாக்குகின்றன. இந்த நோய் உயிருக்கு ஆபத்தா னது.

கொரோனா நோயாளிகளைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு உயிரைக் காக்க வழங்கப்படும் “ஸ்டிரொய்ட்“ மருந்துகளால் இந்த நோய் தூண்டப்படலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

“ஸ்டிரொய்ட்”களைப் பொறுத்தமட்டில், அவை கொரோனா நோயாளிகளின் நுரையீரல் வீக்கத்தை குறைத்து,கொரோனாவை எதிர்த்துப் போராட உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு அதிகளவில் செயல்படுகிறபோது, ஏற்படுகிற சில சேதங்களை தடுக்கின்றன. ஆனால், அவை நோய் எதிர்ப்பு சக்தியை குறைத்து, நீரிழிவு நோயாளிகள் மற்றும் நீரிழிவு இல்லாத பிற கொரோனா நோயாளிகளின் இரத்த சர்க்கரையின் அளவை அதிகரித்து விடுகின்றன.

நோய் எதிர்ப்பு சக்தி குறைவதுதான் கொரோனா நோயாளிகளின் மியூகோர்மைகோசிஸ் பிரச்னைக்கு காரணமாக இருக்கலாம் என கூறப்படுகிறது. இந்த நோய் தாக்குதல் பற்றிய தகவல்களை அறிந்ததும் இதற்கான மருந்து தயாரிப்பை அதிகரிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மத்தியில் இப்போது கறுப்புபூஞ்சை நோய் பரவல் இந்திய மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)

## மக்கள் தொகையில்

# இன்னும் இரு ஆண்டுகளில் சீனாவை இந்தியா மிஞ்சும்!

பீஜிங், மே 14

இன்னும் இரண்டு ஆண்டுகளில் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா மிஞ்சிவிடும் என்று சீன மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் கணித்துள்ளனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஐ.நா. வெளியிட்ட புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவின் மக்கள் தொகை 137 கோடி ஆகும். சீனாவின் மக்கள்தொகை 143 கோடி.

இருப்பினும், 2050ஆம் ஆண்டுக்குள் இந்திய மக்கள் தொகையில் 27 கோடியே 30 இலட்சம் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும், 2027ஆம் ஆண்டுக்குள் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா மிஞ்சிவிடும் என்றும் ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

ஆனால், ஐ.நா. கணித்த காலத்துக்கு முன்பே சீனாவை இந்தியா மிஞ்சிவிடும் என்று சீன மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கப்பட்ட சீன மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டன.

இதன்படி, சீன மக்கள்தொகை 141 கோடியே 18 லட்சம். அடுத்த ஆண்டு இது மேலும் குறையும் என்று கருதப்படுகிறது. மக்கள்தொகை சரிவால், சீனாவின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றும் அச்சம் எழுந்துள்ளது. (ஐ)



# சிரியாவில் இராணுவ வசதிகளை விரிவுபடுத்துகின்றது ரஷ்யா!

மொஸ்கோ, மே 14

சிரியாவில் இராணுவ வசதிகளை விரிவுபடுத்த இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய இராணுவ தரப்பில் புதன் கிழமை கூறும்போது, “ சிரிய அரசின் பாதுகாப்பு படைகளுடன் ரஷ்ய படைகள் இணைந்து தொடந்து பயணிக்கும். ஏப்ரல் 23 ஆம் திகதியிலிருந்து சுமார் 228 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிரியாவில் ராணுவ வசதிகள் விரிவுப்படுத்தப்பட உள்ளன.” என்று தெரிவித்துள்ளது.

சிரிய ஜனாதிபதி ஆசாத்துக்கும், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்துவரும் சண்டை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இதில் ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவளித்து வருகிறது. கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் - பலஸ்தீனம் நேற்றும் கடும் மோதல்!

- 70 இற்கும் மேற்பட்டோர் பலி!
- 374 பேர் இஸ்ரேலில் கைது
- 1500 ஏவுகணைகள் ஏவப்பட்டன



ஜெருசலேம், மே 14

இஸ்ரேல் இராணுவம் - ஹமாஸ் அமைப்பினரிடையே மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன.

இதனிடையே போர் ஆரம்பமான நாள் முதல் நேற்று வரை காசா பகுதியில் 67 பலஸ்தீனியர்கள் மரணமாகினர். 400 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேபோன்று ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 7 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர் என்றும் 200இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் எனவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் காஸா நகருக்கான ஹமாஸ் தளபதி பாஸ்செம் இஸா கொல்லப்பட்டார். இதையடுத்து பல டசின் ஏவுகணைகளை ஹமாஸ் அமைப்பு ஏவிவருகின்றது.

அந்த அமைப்பு இஸ்ரேல் நகரங்களை குறி வைத்து நேற்று வரை 1500 ஏவுகணை களை வீசியுள்ளதது என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேல் நகர்களில் அராபியர்களும் யூதர்களும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு வன்முறைகளில் ஈடுபட்ட 374 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்த சண்டையால் 36 பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலை வெளியில் உள்ள எதிரிகளிடமிருந்தும், உள்ளே கலவரக்காரர்களிடம் இருந்தும் பாதுகாக்க அரசாங்கம் தனது முழு பலத்தையும் பயன்படுத்தும் என்று இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேற்கு கரையின் சில பகுதிகளை நிர்வகிக்கும் பலஸ்தீன ஆணைக்குழு, இஸ்ரேலின் இராணுவ ஆக்கிரமிப்பை கண்டித்துள்ளது. இந்தத் தாக்குதல்கள் 20 இலட்சம் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது. (ஐ)

# ‘சினோபார்ம்’ பாதுகாப்பானது!

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு

World Health Organization

ஜெனிவா, மே 13

சீனாவில் கொரோனாவுக்கு எதிராக கண்டுபிடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ள சினோபார்ம் தடுப்பூசி பாதுகாப்பானது என உலக சுகாதார நிறுவனம் உறுதிபடுத்தியுள்ளது.

இது குறித்து ஜெனிவாவில் உலக சுகாதார நிறுவனத்தின் உதவி தலைமை இயக்குநர் மரிய ஏஞ்சலா சிமாவோ நிருபர்களிடம் கூறியபோது, “கடுமையான கொரோனாவுக்கு எதிரான செயல் திறன் மிக்கது சீனாவின் சைனோபார்ம் தடுப்பூசி என்பதற்கு எங்களிடம் ஆதரவு உள்ளது.

இந்த தடுப்பூசி உலகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 6 கோடியே 20 லட்சம் டோஸ்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது பாதுகாப்பானது. செயல் திறன் மிக்கது” என்பதை நான் குறிப்பிடுகிறேன் என்றார்.

இந்நிலையில், கடந்த வாரம் இந்த தடுப்பூசியின் அவசர பயன்பாட்டு அனுமதியை உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு



# எல்.பி.எல். ரி-20 போட்டியின் 2ஆவது தொடர் ஜூலையில்!

கொழும்பு, மே 14

எல். பி. எல். என்றழைக்கப்படும் லங்கா பிறீமியர் லீக் இருபது - 20 போட்டியின் இரண்டாவது தொடர் எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித் துள்ளது.

நாங்கள் தற்போது , இந்த ஆண்டின் எல்.பி.எல். தொடரை நடத்த பொருத்தமான காலத்தை கண்டு பிடித்துள்ளோம். இதன்படி, ஜூலை 30 முதல் ஒகஸ்ட் 22 வரை நடைபெறும். போட்டியின் பிற விவரங்களை இறுதி செய்வதில் தற் சமயம் ஈடுபட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட்டின் மேலாண்மைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அர் ஜுனா டி சில்வா கூறியுள்ளார்.

எல்.பி.எல்.லின் முதலாவது தொடரில் சர்வதேச வீரர்களின் பங்களிப்புடன் கடந்த ஆண்டு நடந்தது. இதில், 5 அணிகள் பங் கேற்றன. இத் தொடரின் அனைத்து போட்டிகளும் அம்பாந்தோட்டை சூரியவெவ மைதானத்தில் நடைபெற்றது. இதில், திஸர பெரேரா தலைமையிலான யாழ்ப் பாணம் ஸ்ராலியன்ஸ் அணி சம்பியன் ஆனது.

இந்த நிலையில் இரண்டாவது தொடரின் இறுதி முடிவை எடுப் பதற்கு முன்னர் நாட்டின் சுகாதார நிலைமையை அறிந்து கொள்வ தற்காக இலங்கை கிரிக்கெட் சுகாதார அமைச்சகத்துடன் கலந்துரையாடும் என்று தெரியவரு கின்றது. (ஐ)

LANKA PREMIER LEAGUE 2020



## பாகிஸ்தான் வீரர் அமீர் ஐ.பி.எல்லில் ஆட வாய்ப்பு

புதுடில்லி, மே 14

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளுடன் ஏற் பட்ட மனக்கசப்பால் 29 வயதாக வேகப்பந்து வீச்சாளர் முஹமது அமீர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

இவர் தற்போது பெரும்பாலும் இங்கிலாந்திலேயே தங்கியுள்ளார். அவரின் பிள்ளைகள் இங்கிலாந்திலேயே உள்ளனர். இவர் இன்னும் 6 முதல் 7 வருடங்கள் விளை யாட உள்ளார் எனத் தெரிவித்துள்ளார். இவர் காலவரை யின்றி இங்கிலாந்தில் தங்க அனுமதி பெற்றுள்ளார்.

அவர், ஒருவேளை இங்கிலாந்து குடியுரிமை பெற விண்ணப்பம் செய்தால், கிடைத்துவிடும். இங்கிலாந்து குடியுரிமை பெற்றுவிட்டால், ஐ.பி.எல். போட்டியில் விளையாட வாய்ப்புள்ளது. பாகிஸ்தான் வீரர்கள் ஐ.பி. எல். போட்டியில் பங்கேற்க இந்திய கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

இதற்கு முன் பாகிஸ்தான் முன்னாள் வீரர் அசார் மஹ்மூத் இங்கிலாந்து குடியுரிமை பெற்று, ஐ.பி.எல். போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகளுக்காக விளையாடியுள்ளார். அதேபோல் முஹமது அமீருக்கும் வாய்ப்புள்ளது. (ஐ)

## இத்தாலி ஓப்பன் ரென்னிஸ்: செரீனா, ஒஸாகா தோல்வி!

ரோம், மே 14

இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் அமெரிக்காவின் செரீனா, ஜப்பானின் ஒஸாகா ஆகியோர் அதிர்ச்சி தோல்வியடைந்தனர்.

இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடர் ரோம் நகரில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில், தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் ஜப்பானின் நவோமி ஒஸாகாவை 7-6 (7-2), 6-2 என்ற செற் கணக்கில் 31ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் ஜெஸிகாக பெகுலா தோற்கடித்தார்.

இதேபோன்று, ரென்னிஸ் உலகின் பிரபல வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 7-6 (8-6), 7-5 என்ற செற் கணக்கில் நடியா போடோ ரோஸ்கா வீழ்த்தினார். 39 வயதான செரீனாவுக்கு இது ஆயிரமாவது (851 வெற்றி, 149 தோல்வி) போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார் ஆஷ்லே!

ரோம், மே 14

இத்தாலி ஓப்பன் ரென்னிஸில் மூன்றாவது சுற்றுக்கு அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டி முன்னேறியுள் ளார்.

இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடர் ரோம் நகரில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் நேரடியாக 2-வது சுற்றில் அடியெ டுத்து வைத்த முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்ட்டி (அவுஸ்திரேலியா) தன்னை எதிர்த்த ஷிவ்டோ வாவை (கஜகஸ்தான்) 6-4, 6-1 என்ற நேர் செற்றில் எளிதில் வென்றார்.

மற்றோர் ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான எலினா ஸ்விடோலினா (உக்ரைன்) 2-6, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் அனிசிமோவாவை (அமெரிக்கா) போராடி சாய்த்தார்.

கரோலினா பிளிஸ்கோவா (செக்குடியரசு), முகுருஜா (ஸ்பெயின்), சபலென்கா (பெலாரஸ்) ஆகிய முன்னிலை வீராங்கனைகளும் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர். (ஐ)





## ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை: முதலிடத்தில் இந்தியா!

டுபாய், மே 14

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று வெளி யிட்ட வருடாந்த டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இதன் மூலம் ஐந்தா வது ஆண்டாகவும் முதலிடத்தை தக்கவைத்து சாதனை படைத்துள்ளது.

தரவரிசை பட்டியலின்படி, இந்தியா 24 போட்டி களில் விளையாடி 121 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

நியூஸிலாந்து 18 போட்டிகளில் விளையாடி 120 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. இங்கி லாந்து 32 போட்டிகளில் விளையாடி 109 புள்ளிகளு டன் 3ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியா 17 போட்டிகளில் விளையாடி 108 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 24 போட்டிகளில் விளையாடி 94 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும் உள்ளன.

மேற்கிந்தியத்தீவுகள் 84 புள்ளிகளுடன் 6ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா 80 புள்ளிகளுடன் 7ஆவது இடத்திலும், இலங்கை 78 புள்ளிகளுடன் 8ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 46 புள்ளிகளுடன் 9ஆவது இடத்திலும், சிம்பாப்வே 35 புள்ளிகளுடன் 10ஆவது இடத்திலும் உள்ளன. (ஐ)

## ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியை நடத்த முடியும் என்று நம்பிக்கை!

ரோக்கியோ, மே 14

சர்வதேச ஒலிம்பிக் குழு ஜப்பானில் பரவலான மக்கள் எதிர்ப்பையும் மீறி திட்டமிட்டபடி ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் நம்பிக்கை கொண்டுள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தால் கோவிட் -19 ஐ எதிர்கொள்ள முடியும் என்றும், விளையாட்டு ஒரு வரலாற்று நிகழ்வாக இருக்கும் என்றும் சர்வதேச ஒலிம்பிக் குழு நம்பிக்கை கொண்டுள்ளது.

ரோக்கியோ ஒலிம்பிக் எதிர்வரும் ஜூலை 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எனினும் மூன்று மாதங்களுக்கும் குறைவான காலப் பகுதி உள்ள நிலையில் ஜப்பான் கோவிட் -19 தொற்றுநோய்களின் எழுச்சியை எதிர்த்துப் போராடுகிறது.

ஜப்பானில் நடத்தப் பட்ட ஆய்வுகள், அதன் பெரும்பான்மையான மக்கள் ஒலிம்பிக்கை இரத்து செய்ய வேண்டும் அல்லது இரண்டாவது முறையாக ஒத்திவைக்க வேண்டும் என்று விருப் பம் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

TOKYO 2020

# அடுத்த வாரம் மிக மோசமடையும் கொரோனா; சிவப்பு பட்டியலில் சேர்க்கப்படும் இலங்கை!

## அரச தாதியர் சங்கத்தின் தலைவர் எச்சரிக்கை



கொழும்பு, மே14

**இலங்கையில் தற்போது பதிவாகி வரும் கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை தரவுகளின்படி அடுத்த வாரத்துக்குள் கொரோனாத் தொற்றுப் பரவலின் சிவப்புப் பட்டியலில் எமது நாடு சேர்க்கப்படும் என்று அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.**

அத்துடன் கொரோனாத் தொற்றின் மிக மோசமான கட்டத்தை இலங்கை அடுத்த வாரத்துக்குள் அடையும் என்றும் அவர் கூறினார்.

இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு அதிகளவான செல்வந்தர்கள், வெளிநாட்டு வர்த்தகர்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர் என விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது தீவிரமடைந்து வரும் கொரோனாத் தொற்றைத் தவிர, இந்தியாவில் பரவி வரும் அரிய வகை தொற்று நோயான மியூகோர்மைகோசிஸ் என்ற கறுப்பு பூஞ்சை நோயும் பரவும் அபாயம் உள்ளது என்றும் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வடக்கில் தொற்றாளர்களை தங்கவைக்க 9 நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 14

வடக்கு மாகாணத்தில் அறிகுறி இல்லாமல் கண்டறியப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களைத் தங்க வைப்பதற்கு 9 நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தலா 3 நிலையங்களும், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா ஒவ்வொரு நிலையங்களும் இயங்கவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே கோப்பாய் தேசிய கல்வியல் கல்லூரியில் தனிமைப்படுத்தல் நிலையம் இயங்கி வருகின்றது. அதேவேளை, வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையம் இராணுவத்தினரால் சுகாதாரத் தரப்பினரிடம் கையளிக்கப்படவுள்ளது. நாவற்குழி அரச உணவுக் களஞ்சியமும் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிருஷ்ணபுரம், பாரதிபுரம் மற்றும் இயக்கச்சியில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பிலும் தனிமைப்படுத்தல் நிலையம் இயங்கி வருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் பாடசாலை ஒன்று தனிமைப்படுத்தல் மையமாக மாற்றப்பட்டு வருகின்றது. வவுனியா மாவட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. இதுவும் இராணுவத்தினரால் சுகாதாரத் தரப்பினரிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கடும் சுகாதார கட்டுப்பாட்டுடன் விமான நிலையங்கள் இயங்கும்

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



கொழும்பு, மே 14

நாட்டில் கடுமையான சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் விமான நிலையங்கள் இயங்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வதுபிடிவல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விமான நிலையங்களை மூடுவதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

விமான நிலையங்களை மூடிவிடுவதால், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் நாட்டுக்கு வருவதற்கான வாய்ப்பை இழக்கக்கூடும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# உள்நாட்டு ஐ.எஸ்.ஐ.எஸ். முகவர்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## அமைச்சர் சரத் வீரசேகர அறிவுறுத்து



கொழும்பு, மே 14

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முகவர்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் சந்தேகத்துக்கிடமான நகர்வுகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் சில நடவடிக்கைகள் குறித்து உளவுத்துறை தகவல்கள் கிடைத்துள்ளன எனவும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைப் போன்ற பேரழிவுகளைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். என்பது ஒரு கருத்தியல் என்றும், சாதாரண இஸ்லாமிய நம்பிக்கையாளரையும் அடிப்படைவாதிகளையும் வேறு பிரித்து அறிவது சிரமம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் சரத் வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

## பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ள

# சந்தேகநபர்கள் சுட்டுக் கொல்லப்படுவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

கொழும்பு, மே 14

இலங்கையில் பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ள சந்தேகநபர்கள் சுட்டுக் கொல்லப்படுவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த 'ஊரு ஜூவா' எனும் மெலோன் மாபுல மற்றும் 'கொஸ்கொட தாரக' எனும் தாரக பெரேரா ஆகியோர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ள சந்தேகநபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பொலிஸாரின் கடமை என்பதையும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவர்களின் கொலைகள் நீதித்துறைக்குப் புறம்பான கொலைகளின் அடையாளங்களைக் கொண்டிருப்பதாக சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தடுப்புக் காவலில் உள்ளவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசுக்கு சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பும் விடுத்துள்ளது.

தமது சேவை பெறுநருக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது எனக் கொல்லப்பட்டவர்களின் சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருந்த நிலையில், இவ்வாறான துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தடுப்புக் காவலில் உள்ள சந்தேகநபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமல் போனது பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸாரின் தோல்வி என்றும் சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (இ)

# அவசியமான அனைவருக்குமே கொரோனா தடுப்பூசி கிடைக்கும்

## இராணுவத் தளபதி உறுதி

கொழும்பு, மே 14

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி அவசியமான அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்படும் என்று கொரோனாத் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்குப் பல்வேறு நாடுகளில் இருந்தும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் தடுப்பூசி தேவைக்கு ஏற்ப எதிர்வரும் மாதங்களில் இரண்டாம் தொகை தடுப்பூசி கிடைக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசி 13 இலட்சமும், அஸ்ட்ரா செனிகா தடுப்பூசி 6 இலட்சமும் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் - பலஸ்தீனம் முன்வர வேண்டும் இலங்கை - பலஸ்தீன் பாராளுமன்ற நட்புறவு சங்கம் அழைப்பு

கொழும்பு, மே 14

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய நாடுகள் போர் நிறுத்தத்துக்கு வர வேண்டும் என்று இலங்கை - பலஸ்தீன பாராளுமன்ற நட்புறவு சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் ஆகிய நாடுகளில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இலங்கை - பலஸ்தீன பாராளுமன்ற நட்புறவு சங்கம் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

இரண்டு நாடுகளும் போர் நிறுத்தம் செய்து, பேச்சுகளுக்கு முன்வர வேண்டும் என்றும், இலங்கை - பலஸ்தீன் பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனின் காஸா, மேற்குக் கரை மற்றும் ஜெருஸலம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்று வரும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் நட்புறவு சங்கத்தின் அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## முள்ளிவாய்க்கால் முற்றத்தில்...

இதேவேளை, அங்கு புதிதாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த நினைவுக் கல்லும் இராணுவத்தினரால் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடுகை செய்வதற்காக அதிக எடையுடைய புதிய நினைவுக் கல் நினைவேந்தல் நிகழ்வு குழுவினரால் இராணுவத்தினரின் கடுமையான நெருக்குவாரங்களுக்கு மத்தியில் நேற்றுமுன்தினம் மாலை அங்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. அதையடுத்து அங்கு நேற்றுமுன்தினம் மாலை முதல் இராணுவத்தினர் பாதுகாப்பில் இருந்தனர். குறித்த பகுதி யாரும் நுழைய முடியாத பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு அந்தப் புதிய நினைவுக் கல் இராணுவத்தினரால் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன், அங்கிருந்த நினைவு முற்றமும் சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சின்னமும் இராணுவத்தினரால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இந்த வெறியாட்டத்துக்கு எதிராகத் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். (இ)

## பயன தடையை...

நேற்றிரவு முதல் நடைமுறைக்கு வந்த பயணக் கட்டுப்பாடு விளக்கமளிக்கும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது கொரோனா தொற்று நிலைமை அதிகரித்துக் காணப்படுகின்றது. நேற்று முன்தினம் மாத்திரம் 67 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தேசிய மட்டத்தில் அறிவுறுத்தப்பட்ட சில நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் அமுல்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. அந்த வகையில் அந்த வகையில் இன்று (நேற்று) இரவு 11 மணி முதல் 17ஆம் திகதி அதிகாலை நான்கு மணி வரை கொரானா ஒழிப்பு மத்திய நிலையத்தால் பயணதடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த பயணத் தடை காலத்தில் பொது போக்குவரத்து முற்றாக தடைப்படும். கடைகள் மற்றும் ஏனைய பல்பொருள் அங்காடிகள் மூடப்பட்டு இருக்கும். ஆனால், அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் இடம்பெறலாம்.

ஆகவே, பொதுமக்கள் எதிர்வரும் மூன்று நாட்களும் தங்களுடைய வீடுகளில் இருந்து இந்த செயல்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எனவே, இந்த மூன்று நாட்களும் விடுமுறை நாட்கள் என்பதனால் வெளியில் சகல நடவடிக்கைகளும் செயலிழந்து காணப்படும். எனவே, பொது மக்கள் வெளியில் நடமாட வேண்டிய தேவை இருக்காது.

மருத்துவ சேவை மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் செயல்படும். வைத்தியசாலைக்கு அல்லது அத்தியாவசிய சேவைக்கு வெளியில் செல்வோர் பயண கட்டுப்பாட்டுடன் சென்று வர முடியும்.

தற்போது இந்த இடர் நிலைமையை எதிர்கொள்வதற்கு ஒவ்வொரு பிரதேச செயலர் மட்டத்திலும் பிரதேச செயலர்கள், பிரதேச குழுக்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய போக்குவரத்திற்கு பொதுமக்கள் அனுமதி கோருவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். எதிர்வரும் மூன்று நாட்களுக்கு பயணங்களை மட்டுப்படுத்தி கொள்ளுங்கள். அத்தோடு, எதிர்வரும் 31ஆம் திகதி வரை அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் அடையாள அட்டை இலக்கங்களை பயன்படுத்தி அவர்கள் தமது சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே பொதுமக்கள் சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டு பாதிப்பை ஏற்படுத்த முன்வராது, தமது குடும்பத்தையும் சமூகத்தையும் எமது மாவட்டத்தினை தொற்றிலிருந்து பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும். அரசாங்கத்தின் சுகாதார கட்டுப்பாடுகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள், கைதுகள் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலும் சுகாதார விதிகளை மீறுவோர் கைது செய்யப்படுவர் - என்றார். (ஐ-3)

## யாழில் 58 பேர்...

கள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடம் என்பவற்றில் 853 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 58 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பேரும், வவுனியா மாவட்டத்தில் 2 பேரும் என வடக்கு மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் 74 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சுகாதார உத்தியோகத்தர் ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மாங்குளம் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 3 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் நால்வரும் வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபடும் பணியாளர்கள்.

வவுனியா மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் 2 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சுகாதார உத்தியோகத்தர்கள்.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 18 பேருக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 39 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கும் என 58 பேருக்குக் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது" - என்றார். (இ)

## விபத்தில்...

னது. இந்த சம்பவத்தில் காயமடைந்த ஏழு பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இதில், படுகாயமடைந்த தாயும் மகனும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றனர்.

இந்நிலையில், தாயார் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். தாயார் மறைந்த மறுநாளான நேற்று மகனும் உயிரிழந்தார்.

இந்நிலையில், காயமடைந்த ஏனையோர் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# கொரோனாவின் பேரழிவிலிருந்து பாதுகாப்புப் பெற பிரார்த்திப்போம்

## ஜனாதிபதி, பிரதமர் நோன்புப் பெருநாள் வாழ்த்து

கொழும்பு, மே 14

முஸ்லிம்கள் அனைவருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

உலகம் எதிர்கொண்டுள்ள கொரோனா பேரழிவிலிருந்து உலக மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இஸ்லாமியர்கள் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரமழான் நோன்பு காலத்தை நிறைவு செய்து, கொண்டாடும் ஈதுல் பித்ர் நன்னாளில் இலங்கை வாழ் முஸ்லிம்களின் அனைத்து நல்லெண்ணங்களும் ஈடேற வேண்டும் என்று ஜனாதிபதி வாழ்த்தியுள்ளார்.

"சமூகங்களுக்கு இடையில் அமைதியையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்பி, உலகுக்கு நாம் எடுத்துக் காட்டிய நல்லிணக்கம் முழு இஸ்லாமிய உலகுக்கும் ஒரு சிறந்த முன் உதாரணமாகும்.

புனித அல் குர்ஆனின் போதனைகளை பின்பற்றும் உண்மையான முஸ்லிம்கள் இந்த கூட்டு அர்ப்பணிப்பையும் திட உறுதியையும் மேலும் பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என்று நான் நம்புகின்றேன்" என்றும் ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரமழான் நோன்பு காலத்தை நிறைவு செய்து, உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் இஸ்லாமியர்களுடன் இணைந்து ஈதுல் பித்ர் திருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## தையிட்டி திருமண...

நேற்று யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 74 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## முடக்க நிலையை...

டுப்பாடுகள் உரிய முறையில் பின்பற்றப்படுவதை உறுதி செய்யும் நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவார்கள்வும் என அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறியமைக்காக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டால் அவரது வாகனம் உடனடியாக பறிமுதல் செய்யப்படும் எனவும், தெரிவித்த அவர், நிறுவனங்கள் திறக்கப்பட்டிருந்தால் அவை மூடப்படலாம் எனவும் அவர்தெரிவித்துள்ளார்.

நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் போக்குவரத்து முடக்கம் மீறப்பட்டால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வர்த்தக...

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நேற்றிரவு 11 மணி முதல் நாடு முழுவதும் மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாகப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மக்களின் நடமாட்டம் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்பதால் எதிர்வரு திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரையில் வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.

குறிப்பாக மருந்துகளைக் கொள்வனவு செய்யவும், வைத்தியசாலைக்குச் செல்லுவோருக்கும் அனுமதி வழங்கப்படும்.

மருந்தகங்களுக்கு மருந்துகளை விநியோகிக்க அனுமதி வழங்கப்படும். அதனைத் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படாது.

இந்த மூன்று நாட்களும் அடையாள அட்டையின் இறுதி இலக்க நடைமுறையும் செயற்படுத்தப்படாது" - என்றார். (இ)

## பதிவு திருமணத்து...

ரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் (15 பேர்) பதிவுத் திருமணங்களை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார். எனினும், திருமண விருந்து பசாரங்கள் மற்றும் களியாட்ட நிகழ்வுகளை முன்னெடுக்க அனுமதி இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஓயாத கொரோனா...

இதன்படி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 796 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 802 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 26 ஆயிரத்து 126 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## முள்ளிவாய்க்கால்...

நீதிவான் நீதிமன்றில் தடை உத்தரவு ஒன்றைக் கோரினர்.

இதன்படி, கோவிட் 19 நிலையை கருத்தில் கொண்டு 16 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை முள்ளிவாய்க்காலில் எந்த நிகழ்வும் நடத்தகூடாது மக்கள் கூடக் கூடாது பொது இடத்தில் வைத்து நினைவுகூரக்கூடாது என்று அந்த உத்தரவில் நீதிமன்றைக் கோரினர்.

அத்துடன், முல்லைத்தீவு பொலிஸ் பிரிவை சேர்ந்த வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க தலைவி ம.ஈஸ்வரி, தமிழ் அரசு கட்சியின் இளைஞர் அணி தலைவர் பீற்றர் இளஞ்செழியன், தவிசாளர் க.விஜிந்தன், அருட்தந்தை வசந்தன் ஆகியோரின் பெயர் குறிப்பிட்டு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

யுசு 418 ஃ 21 வழக்கு இலக்கத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவை வழங்கியுள்ளது. (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

களையும் தகர்த்திருக்கின்றது எனவும் அவர் கூறினார்.

மரணித்தவர்களின் நினைவுத் தூபியை உடைப்பதென்பது அநாகரிகத்தின் உச்சக் கட்டம். இராணுவமும் பொலிஸூம் அந்த இடத்துக்கு வந்து பார்வையிட்ட பின்னர்தான் நினைவுத் தூபி உடைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கு எவரும் தடை விதிக்க முடியாது எனவும், அந்த நினைவுகளை எந்த உத்தரவும் மழுங்கடிக்கவும் முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைச் செய்வோம் எவராலும் தடுக்க முடியாதபடி செய்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

ஈழநாடு
Eelanadu



## முள்ளிவாய்க்காலில் நேற்று த.தே.ம. முன்னணி அஞ்சலி!

முல்லைத்தீவு, மே 14

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இரண்டாம் நாளான நேற்று பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்தினர்.

இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவேந்தி முள்ளிவாய்க்காலில் ஆண்டு தோறும் மே 18 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றுவருகிறது. இந்நிலையில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது இனப்படுகொலை என்பதை வலியுறுத்தி மே 12 முதல் மே 18வரை இனப்படுகொலை வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் 19 நிலைமைகள் காரணமாக நினைவேந்தல் வாரத்தில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான நேற்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# உள்ளக விசாரணைக்கு துணைநின்றோரும் தூபி உடைப்புக்கு பொறுப்பு கூறவேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

முல்லைத்தீவு, மே14

**அரசாங்கம் செய்த படுகொலைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்லவிடாமல் தடுத்து, உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு கொடுத்து சர்வதேச சக்திகளுக்கு தேவையாக தமிழர்களின் விவகாரம் பயன்படுத்தப்படுவதற்கு துணைநின்றவர்களும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**




முள்ளிவாய்க்காலில் இறுதிப் போர் நினைவுத்தூபி நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டது. இவ்வாறு உடைக்கப்பட்ட தூபியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் நேற்று சென்று பார்வையிட்டார்.

இதன்போது ஊடகங்களுக்கு அவர் கருத்து வெளியிடுகையில்,

“பொலிஸாரும் இராணுவத்தினரும் உள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவிற்கு நெருக்கடி கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த நினைவுக்கல்லிற்கு பொறுப்பு பொலிஸாரும் இராணுவத்தினரும்தான் இவர்களுக்கு தெரியாமல் நினைவுக்கல் அகற்றப்பட்டிருக்க முடியாது.

2009 ஆம் ஆண்டு போர் நடைபெற்றபோது கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராகவும்,மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் இருந்தார்கள். அவர்களால் மேற்கொள்ளப்பட்டதுதான் இந்த திட்டமிட்ட இனப்படுகொலை.

இதற்கு சர்வதேச விசாரணை தேவை என்று தமிழர்கள் கோரியிருந்தார்கள்.

இந்த நிலையில் நினைவேந்தலை செய்ய முடியாமல் நினைவுக்கல்லைக் கூட நாட்டமுடியாமல் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் நெருக்கடிகள் கொடுப்பது என்பது கண்டிக்கத்தக்க விடயம். குறித்த நினைவுக்கல் அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தெருவெங்கும் தமிழர்கள் மீது இனவழிப்பு செய்த இராணுவத்தினருக்கு நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன. ஆனால், இந்த மண்ணுக்கு சொந்தக்காரார்களான தமிழர்களுக்கு - அவர்கள் மண்ணில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்ற இடத்தில் உறவினர்காளால் வணக்கம் செய்யமுடியாதளவிற்கு ஒரு நெருக்கடி நிலைமை இருக்கின்றது.

இந்த நிலைமைக்குக் காரணம், இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனப்படுகொலைக்கு ஒரு சர்வதேச குற்றவியல் விசாரணை நடைபெறாமல் உள்ளக விசாரணைக்கு பத்து ஆண்டுகளாக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வந்ததே.

படையினரும், பொலிஸாரும் பதவியில் இருக்கின்ற கோட்டாபய அரசாங்கம் மட்டுமல்ல, அரசாங்கம் செய்த படுகொலைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லவிடாமல் தடுத்து உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு கொடுத்து சர்வதேச சக்திகளுக்கு தேவையாக தமிழர்களின் விவகாரம் பயன்படுத்தப்படுவதற்கு துணைநின்றவர்களும் இதற்கு பொறுப்பு கூறவேண்டும் - என்றார். (ஐ)

# இறுதி யுத்தத்தில் உயிரிழந்தோருக்கு நானாட்டான் பிரதேச சபை அஞ்சலி!

மன்னார், மே 14

இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களுக்கு நேற்று வியாழக்கிழமை மன்னார் - நானாட்டான் பிரதேச சபை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபையின் 39 ஆவது அமர்வு நேற்று காலை 10 மணியளவில் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் திருச் செல்வம் பரஞ்சோதி தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது நானாட்டான பிரதேச சபையின் உறுப்பினர் ஆர்.ஜீவனின் ஏற்பாட்டில் இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களுக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், சக உறுப்பினர்கள் கலந்து கொண்டு உயிர் நீத்த மக்களுக்கு சுடர் ஏற்றி 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து சபை அமர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுகாதார சேவை பணியாளர்களை நினைத்தவுடன் அதிகரிக்க முடியாது

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கூறுகின்றார்

கொழும்பு, மே 14

“மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது போன்று சுகாதார சேவைக்கு ஒரே நேரத்தில் பணியாளர்களை அதிகரிப்பு எளிதானது அல்ல.”

- இவ்வாறு கொரோனா விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

ஏனெனில் சுகாதார சேவைகள், ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கொரோனா நெருக்கடி ஆகியவற்றில் பணியாற்றுவதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கு அதிகமான காலம் தேவை எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொரோனாத் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை சுகாதாரத்துறையினரால் சிகிச்சை அளிக்கக் கூடிய அளவை விடவும் அதிகமானால் நாடு ஒரு மோசமான சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிடும். எனினும், நாட்டில் தற்போது வரை சுகாதாரத்துறையினரால் கட்டுப்படுத்தக்கூடிய மட்டத்தில் கொரோனாத் தொற்று உள்ளது.

மருத்துவமனைகளில் தற்போது, சுமார் 600 முதல் 700 அவசர சிகிச்சைப் படுக்கைகள் இருந்த போதிலும் அவற்றில் பெரும்பாலானவை பிற முக்கியமான நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகப் பயன்படுத்தப் படுகின்றன. மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கவென 190 படுக்கைகள் மட்டுமே உள்ளன.

அத்தோடு, கொரோனாத் தடுப்பூசி திட்டம் விரைவு படுத்தப்பட்டுள்ள நிலையில், தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்கள் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்துக்கொள்வதற்கு இரண்டு முதல் மூன்று வாரங்கள் ஆகலாம். தடுப்பூசிகள் உயிர் இழப்பைக் குறைக்க மட்டுமே உதவுகின்றன.



எனவே, இவ்வாறான ஒரு சூழலில் நாட்டு மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அடிப்படை சுகாதார வழிகாட்டல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்” - என்றார். (இ)

# யாழ். பல்கலை விடுதி மாணவருக்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன!

## நிர்வாகம் அறிவிப்பு

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அத்தியாவசிய பரீட்சை தேவைப்பாடுகளுக்காக விடுதிகளில் மாணவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் திடீரென பயணத்தடை அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், மாணவர்கள் பாதிக்கப்படாத வகையில் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் எழுந்துள்ள பெருந்தொற்று அபாயம் மிக்க காலப் பகுதியிலும், இறுதி ஆண்டு மாணவர்களின் பரீட்சைத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக சுகாதாரப் பகுதியினரால் அறிவிக்கப்பட்டபடி சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, மாணவர்களின் சுய விருப்பின் பேரில் விடுதிகளில் வெளித் தொடர்புகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

எனினும், இன்று (நேற்று) நள்ளிரவு முதல் அறிவிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாகவும், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தடை காரணமாகவும் வீடுகளுக்குச் செல்ல முடியாமல் மாணவர் விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில் நுட்ப பீடத்தின் இறுதியாண்டு மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களும் வீடுகளுக்குத் திரும்பும் வகையில் விசேட போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், வீடுகளுக்குத் திரும்ப முடியாத மாணவர்கள் விடுதிகளில் தங்குவதற்கும், அவர்களுக்குத் தேவையான உணவு விநியோகத்தைச் சீராகச் மேற்கொள்வதற்கும் மாணவர் நலச் சேவைகள் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இதன் படி, மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ். நகர மருத்துவ பீட மாணவர் விடுதியில் தங்கியுள்ள சுமார் 150 மாணவர்களுக்கும், கிளிநொச்சி வளாகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 175 மாணவர்களுக்கும் , மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக் கழக விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 65 மாணவர்களுக்கும் அந்தந்த விடுதிகளின் உணவகங்கள் ஊடாக உணவு விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

கோண்டாவில், கொக்குவில் மற்றும் ஆனந்தக்குமாரசுவாமி மாணவர் விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் சட்டத்துறை, இணை மருத்துவ விஞ்ஞான பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 69 மாணவர்களுக்கு வெளியில் இருந்து விடுதிக்கு உணவு விநியோகம் செய்யப்படவுள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.